மலர்-4 இதழ்-92 ஜுன் 16-30 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

எச்சரிக்கும் கொரானா கீரைகளால் சாதித்த க்யூபா

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play



இலவச e- book

e- magazine
www.aanmeegamalar.com
e-magazine

## இரண்டு வழிபாட்டுமுறை கடைபிடிக்கும் சுசீந்திரம் தாணுமாலயன் திருக்கோயில்




## முன்ஜென்ம பாவம் போக்கும் பொருட்கள்

1. வில்வம்
2. நொச்சி
3. முட்கிளுவை
4. விளா
5. மஹாவில்வம்.

இவை அனைத்தும் சிவனின் முக்கண்கள், முக்குணங்கள் மற்றும் மும்முனை கொண்ட திரிசூலத்தினையும் குறிக்கும் பத்திரங்கள். இவைகளால் அர்ச்சனையும் அபிஷேகமும் செய்வதால் மூன்று ஜென்ம பாபங்கள் விலகுவதாக கூறப்படுகிறது.

## சிவன்-நந்திக்கு இடையில் ஏன் நிற்க கூடாது

ஆலய ஆகம விதிப்படி கர்ப்ப கிரகத்தினுள் இருக்கும் மூலவருக்கும் எதிரில் இருக்கும் நந்திக்கும் இடையில் நின்று வணங்கக்கூடாது. ஆலய சாஸ்திரப்படி மூலவருக்கு முன்னால் உள்ள நந்தியின் மூக்கில் இருந்து விடும் மூச்சுக் காற்றினால் தான், கர்ப்பக்கிரகத்தில் உள்ள மூலவருக்கு உயர்நிலை கிடைக்கும் என்பது நம்பிக்கை.

மூலவரின் வயிற்றுப்பகுதியில் உள்ள தொப்புள் பாகத்தை உயர்நிலையாகக் கொண்டு, அந்த இட மட்டத்தின் நேராக நந்தியின் மூக்கு அமையுமாறு கோவில் களில் நந்தி அமைக்கப்படுகிறது. இம்மூச்சுக் காற்று தடைபடாமல் செல்வதற்காகவே குறுக்கே போவது கூடாது என்கின்றனர். சன்னிதியைவிட்டு அகன்று நின்று வழிபட வேண்டும் என்று சொல்வதும் அதன் காரணமாகத் தான்.



## ஆறுநிலைகளைக் கடந்தவரே கடவுளுக்கு சமமான குருநாதர்



குருநாதர் என்பவர் ஆன்மிகத்தில் ஆறு நிலைகளைக் கடந்தவராக இருக்க வேண்டும். அந்த ஆறுநிலைகளைப் பற்றி பார்ப்போம்.

### முதலாவது நிலை: பக்தி

இறைவனை எந்த முறையிலாவது வணங்குவது பக்தி!

### இரண்டாவது நிலை: ஞானம்

இயற்கையே! கடவுள் என உணர்வது ஞானம்

### மூன்றாவது நிலை: யோகம்

நான்! யாரென்று அறிந்து கொள்ள முற்படுவது யோக நிலை

### நான்காவது நிலை: சீவமுக்தி

தன்னையே! கடவுளாக நினைத்து கடவுளுடன் ஒன்றினைவது

### ஐந்தாவது நிலை: சமாதி

காணும், அனைத்தையும் தன்னுள் காண்பது.

### ஆறாவது நிலை: குருவருள்

தன்னை நாடி வருபவரையும், தன்னைப் போன்று மானுடத்தையும் உணர செய்வது. இந்த ஆறு நிலையை கடந்த ஒருவர் மிகச் சிறந்த குருநாதராகவும், இறைவனுக்கு சம மானவராகவும் விளங்குவார்.

www.aanmeegamalar.com



## யாருடைய அனுமதியுடன் சிவனை வணங்க வேண்டும்?



சிவன் கோவிலுக்கு உள்ளே நுழைகின்ற போது பலபேர் நேராக சன்னதியை நோக்கி போவதை வழக்கமாக கொண்டுள்ளனர். ஆனால் இது தவறாகும்.

முதலில் விநாயகர், முருகன் மற்றும் சுற்றி இருக்கும் அனைத்து பிரகார தெய்வங்களையும் வணங்கிவிட்டு, சிவன் சன்னதிக்கு செல்வதற்கு முன்பு நந்திபகவானை வணங்கி விட்டுத்தான் சிவன் சன்னதிக்கு போக வேண்டும்.

ஆனால் ஒருசிலர் நேராக சென்று சிவபெருமானை வணங்கிவிட்டு வெளியே வரும்போதுதான் நந்தியை வணங்குகிறார்கள். அது தவறு சிவபெருமானுக்கு நந்திதேவர் மெய்க்காவலர் மட்டும் அல்ல, சிவனை வணங்க அனுமதி தருகின்ற நிலையில் இருக்கின்றவர் நந்திகேஸ்வரர். இந்த நந்திகேஸ்வரர் ஈஸ்வரர் பட்டமும் பெற்றவர் எனவே நந்திகேஸ்வரரை வணங்கி அவர் அனுமதி வாங்கிய பிறகு சிவனை வணங்க வேண்டும்.

## கடவுள் மற்றும் பெரியவர்களை ஆண் பெண் வணங்கும் முறை




பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளை வணங்கும் போது, சிரசின் மேல் 12 அங்குலம் கைகளை உயர்த்தி வணங்க வேண்டும். மற்ற தெய்வங்களை சிரசின் மேல் கைகளைக் குவித்து வணங்கினாலே போதுமானது.

- ❖ குருவை வணங்கும் போது, நெற்றிக்கு நேராக கைகூப்பி வணங்க வேண்டும்.
- ❖ தந்தையை வணங்கும் போது, வாய்க்கு நேராக கைகூப்பி வணங்க வேண்டும்.
- ❖ தாயை வணங்கும் போது, வயிற்றிற்கு நேராக கை வைத்து வணங்க வேண்டும்.

மாதா, பிதா, குரு தெய்வங்களை வணங்கும் போது, ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். அதாவது பூமியில் நெடுஞ் சாண்கிடையாக விழுந்து வணங்குதல் முறையாகும். அதே போல் பெண்கள் மேற் கண்டவர்களை வணங்கும் போது அவசியம் பஞ்சாங்க நமஸ்காரம் (முழங்காலும் தலையும் மட்டும் பூமியில் படுவது) செய்ய வேண்டும்.



www.aanmeegamalar.com

# தாமிரபரணி தண்ணீர் குடித்து வளர்ந்தவரா: கொரானாகூட அஞ்சும்

எந்த வகை மருத்துவமாக இருந்தாலும்அதன் அடிப்படை “நோயறிதல்” (diagnosis) ஆகும். நோயின் தன்மை, அதன் தீவிரம் போன்ற வைகளை அறிந்தால் மட்டுமே முறை யான சிகிச்சை என்பது சாத்தியமாகும். ஒவ் வொரு வகை மருத்துவமும் தனக்கே உரித்தான சில பிரத்யேக நோயறியும் முறைகளை கடைபிடிக் கிறது. இவற்றில் எது சிறந்தது, எது சரியானது என்பதெல்லாம் விவாதங்களுக்கு உரியது.

சித்த மருத்துவத்தில் மனித உடலானது “வாத”, “பித்த”, “சிலேத்தும” என மூன்று வகையாக கூறப்படுகிறது. வாத, பித்த, சிலேத்தும சமநிலையில் மாற்றங்கள் ஏற்படும்போது அவை தொடர்பான நோய்கள் தலையெடுக்கிறது.

சித்த மருத்துவத்தில் வாத நோய்கள் என என்பதும், பித்த நோய்களென நாற்பதும், சிலேத்தும நோய்கள் என தொண்ணூறும் கூறப் பட்டிருக்கின்றன.

சித்த மருத்துவத்தில் நோயறிய சோதிடத் தையும் பயன்படுத்தியிருக்கின்றனர் என்பது பலரும் அறிந்திருக்காத செய்தி. அந்த வகை யில் புலிப்பாணி சித்தர் அருளிய “புலிப்பாணி வைத்திய காவியம்” என்னும் நூலில் காணக்கிடைக்கும் ஒரு நோயறியும் முறை பற்றி பார்ப்போம்.

பாரப்பா இன்னமொரு விவரங்கேளு
பகர்தனுங் குருசனியும் வாதநாடி
சீரப்பா துர்க்கிரகம் சூரிசேயும்
சிறப்பான பாம்புகளும் பித்தநாடி
நேரப்பா பால்மதியும் சுங்கன்தானும்
நேர்மையுள்ள சிலேட்டுமத்தின் கிரகமென்று
வீரப்பா போகருட கடாட்சத்தாலே
விவரமெலாம் புலிப்பாணி விளம்பக்கேளு.
ஒருவருடைய ஜாதகத்தை ஆராயும் போதே

ஜாதகனுக்கு வரப்போகிற அல்லது வந்திருக்கின்ற நோயைப் பற்றி தெளிவாக அறியலாம் என்கிறார் புலிப்பாணிச் சித்தர்.

புதன், குரு மற்றும் சனி 6ஆம் வீட்டு அதிபதி ஆனால் வாத நோய் பீடிக்கும் என்றும், சூரியன், செவ்வாய், 6ஆம் வீட்டு அதிபதி ஆனால் பித்த நோய் பீடிக்கும் என்றும், 6ஆம் வீட்டில் இராகு, கேது நின்றாலும் பித்த நாடி நோய்ப் பாதிக்குமாம்.

சந்திரன், சுக்கிரன் 6ஆம் வீட்டு அதிபதி யானால் சிலேத்தும நோய் உண்டாகுமாம். மேலும், 6ஆம் வீட்டின் அதிபதி கேந்திர திரிகோணங் களில் நின்று குரு பார்வை இன்றி இருப்பின் நோய் தாக்கம் (6ஆம் வீட்டில் அதிபதியின் நாடியைப் பொறுத்து) அந்த நாடியை பொறுத்து அதிகரித்துக் காணப்படும் என்கிறார்.

வாதநாடி: குரு, புதன், சனி

பித்த நாடி: சூரியன், செவ்வாய், இராகு, கேது

சிலேத்தும நாடி: சந்திரன், சுக்கிரன்

- இரத்த அழுத்தம், இருதய நோய், நரம்பு வலி, நரம்பு பிடிப்பு, காக்காய் வலிப்பு, பக்கவாதம், வாயு போன்றவை வாத நோய்கள்.
- சீரணம் தொடர்பான பிரச்சினைகள், வயிற்று வலி, வயிற்றுப்புண், மஞ்சட் காமாலை, இரத்தச் சோகை, இரத்த வாந்தி, கல்லீரல் மற்றும் பித்தப்பை பிரச்சினைகள் பித்த நோய்கள்.
- மூச்சுவிடுதல், மூக்கில் நீர்வடிதல், மூக் கடைப்பு, தடுமன், இருமல், சயம், ஆஸ்துமா போன்றவை சிலோத்தும நோய்கள்.

தற்போது உலகை ஆட்டிப் படைக்கும் கொரானா நோய் சிலோத்தும நாடி வகையைச் சேர்ந்த நோயாகும், மூச்சு சம்பந்தமான பிரச்ச னைகளை கொடுப்பதால் சிலோத்தும நாடி வகையைச் சேர்ந்ததாகும்.

ஆனால் இந்த சிலோத்தும நாடியை சரி செய்யும் வகையில் இயற்கையாகவே ஒரு நதி நமது தமிழகத்தில் உள்ளது. பொதிகை மலையில் தோன்றி, நெல்லை சீமை என அறியப்படும் தென்தமிழகத்தினூடே பாய்ந்து சென்று மன்னார் வளைகுடாவில் கலக்கும் நதி தாமிரபரணி.

தமிழகத்தின் ஒரே ஜீவநதியான தாமிரபரணி ஒரு காலத்தில் இலங்கை வரையில் பாய்ந்ததாக வரலாற்று குறிப்புகள் உள்ளன.

இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும், அநேக புராண கதைகளிலும் கூட தாமிரபரணி பற்றிய குறிப்புகளை நாம் பார்க்க முடிகிறது. தாமிரபரணியின் ஓர் இணையாறுதான் குற்றாலத்தின் புகழ்பெற்ற நீர்வீழ்ச்சியாக கொட்டுகிறது.

பொருநை, தாம்ரபரணி, தாமிரவருணி என வெவ்வேறு பெயர்களும் உன்டு. தாமிரம் எனப்படும் செம்பு உலோகத்தின் படிமங்கள் இந்த நதியில் கலந்திருப்பதால் தாமிரபரணி என பெயர் பெற்றதாக தேரையர் அருளிய "பதார்த்த குண சிந்தாமணி" என்னும் நூலில் பாடற்குறிப்புகள் உணர்த்துகின்றன.

தாம்பிரபன் னிப்புனலாற்
சர்வசுரம் பித்து விழித்
தூம்பிரமுட் காய்ச்சல் சுவாசநோய்
தேம்பிமிகக்
கக்குகய மென்புருக்கி கைகாலெரிவுடனே
மிக்குறுதா கங்களும் போம்பிள்.

மேலும் இந்த நீரை தொடர்ந்து அருந்தி வந்தால் சர்வசுரம், பித்தம், கண் புகைச்சல், உட்காய்ச்சல், சுவாசம், சயம், எலும்புருக்கி, கைகாலெரிவு, அதிக தாகம் ஆகியவை நீங்கும் என்கிறார் தேரையர்.

கொரானா போன்ற கிருமியால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க இயற்கையே ஒரு நதியையே கொடுத்திருந்தும் நாம் அதை போற்றி பாதுகாக்காமல், பல்வேறு கழிவுகள், குப்பைகள், மாசு போன்றவற்றால் நதியை மாற்றிவைத்துவிட்டோம்.

அக்காலத்தில் தாமிரபரணி தண்ணீர் குடித்துவளர்ந்தவர்களுக்கு இந்த கொரானா பாதிப்பு அவ்வளவாக பாதிப்பு ஏற்படாது என்றும் மேற்கண்ட சித்தர்களின் பாடல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

வாய்ப்பும், வசதியும் உள்ளவர்கள் தேரையரின் இந்த தெளிவுகளை உறுதி செய்யும் ஆய்வுகளில் ஈடுபடலாம்.




ஆன்மிகமலர் மெயில் புக்
16-30 ஜூன் 2020 5
www.aanmeegamalar.com

# மனிதர்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டும் இயற்கை

மனிதன் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், செல்வ செழிப்போடு உன்னதமான வாழ்க்கை வாழ வேண்டும் என்று மனிதர்களுக்கு வழிகாட்டியாக ஒருசில உயிரினங்களையும் இறைவன் படைத்துள்ளான்.

அந்த உயிரினங்கள் கடைபிடிக்கும் வழிமுறைகள் சிலவற்றை கடைபிடித்தால் மனிதன் மேற்கண்ட மேன்மைகளை எளிதாக அடையலாம் என்பதை நம் முனோர்கள் அனுபவப்பூர்வமாக உணர்ந்து கூறியுள்ளனர். அதை பின்பற்றியும் வாழ்ந்து காட்டியுள்ளனர்.

ஆனால், தற்காலத்தில் கிடைக்கும் சொகுசான வாழ்க்கையில் நாம் பலவற்றை இழந்துள்ளோம்.

முன்னோர்கள் கடைபிடித்த ஒருசில பழக்க வழக்கங்கள் மறைந்தே போய்விட்டது.

இவ்வாறாக இயற்கையில் இருந்து கற்றுக் கொள்ளக்கூடிய ஒருசிலவற்றை நம் முன்னோர்கள் தெளிவாக கூறியுள்ளவைகள் பற்றி பார்ப்போம்.

❖ குதிரைகள் குடிக்கும் நீர் நிலைகளில் இருந்து நீரருந்தவும். குதிரை ஒருபோதும் கெட்ட தண்ணீரை குடிக்காது.

❖ பூனை தூங்கும் இடத்தில் உங்கள் படுக்கையை இடுங்கள். அமைதி தராத இடத்தில் பூனை உறங்காது.

❖ புழு துளைத்த கனிகளை உண்ணுங்கள். நச்சுக் கனிகளை புழு துளைக்காது.

❖ பூச்சிகள் உட்காந்திருக்கும் காளானைதைரியமாக உணவாக எடுத்துக் கொள்ளுங்கள். விஷக் காளான்கள் மீது பூசிகள் உட்கா ராது.

❖ முயல்கள் குழி பறிக்கும் இடத்தில் மரத்தை நடலாம், மரம் செழிப்பாக வளரும்.

❖ பாம்பு ஓய்வெடுக்கும் இடத்தில் உங்கள் வீட்டைக் கட்டுங்கள். பாம்புகள் குளுமையான இடங்களில் மட்டுமே ஓய்வெடுக்கும்.

❖ பறவைகள் வெப்பத்தை தவிர்க்க ஓய்வெடுக்கும் இடத்தில் உங்களுக்கான நீர் ஊற்றினை தோண்டுங்கள்.

❖ பறவைகள் தூங்கப் போகும் நேரத்தில் தூங்கச் சென்று, அவை விழிக்கும் நேரத்தில் எழுந்திருங்கள். நீங்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும்.

❖ அதிகம் இயற்கையான உணவுகளை உண்ணுங்கள். வலுவான கால்களையும், துணிச்சல் மிக்க இதயத்தையும் பெறுவீர்கள்.

❖ மீன்களை போல அடிக்கடி நீரில் நீந்துங்கள், நீங்கள் பூமியில் நடக்கும் போது கூட மீன்களைப் போலவே உணர்வீர்கள்.

❖ அடிக்கடி வானத்தைப் பாருங்கள். உங்கள் எண்ணங்களில் வெளிச்சமும், தெளிவும் பிறக்கும்.

மேற்கண்டவை அறிவியல் ஆராய்ச்சிக்கூட ஒப்புக் கொண்ட உண்மைகளாகும்.







# அகத்தியர் கூறிய வசிய விபூதி தயாரிக்கும் முறையும்



மகான்கள், முனிவர்களிடம் தங்களது பிரச்ச னையை கூறி பல்வேறு தீர்வுகளை பெற்று பலன் அடைந்துள்ளனர் பலர்.

அக்காலத்தில் கோவில்களில் மட்டுமின்றி பெரியவர்கள், ஆன்றோர்களை சந்தித்து விடை பெறும்போதும் கூட அவர்கள் விபூதி வழங்கி ஆசிர்வதிப்பது நடைமுறையில் இருந்து வந்த பழக்கமாகும். இது காலம் காலமாக கடைபிடிக்கப்பட்டு நடைமுறையில் இருந்த வழக்கமாகும்.

கால ஓட்டத்தில் பெரியவர்களிடம் விபூதி வாங்கும் பழக்கமும், விபூதி கொடுக்கும் பழக்கமும் அருகி விட்டது, தற்போது கோவிலில் மட்டும் இன்றும் இந்த மரபு நீடித்து வருகிறது.

இவ்வாறு வழங்கப்படும் விபூதிக்கு சக்தி அதிகம் இருந்தது. இந்த விபூதிகள் பெரும்பாலும் உரு ஏற்றப்பட்ட விபூதிகளாகவே இருந்தது.

ஆன்மீகத்தில் நாட்டமுள்ள நம் முன்னோர் தொடர்ந்து இறை நாமத்தை ஜெபித்தவண்ணம் இருந்து வந்ததால், அவர்கள் கையில் வாங்கும் விபூதி உருவேற்றப்பட்ட விபூதியாக தனிப்பட்ட சக்தி வாய்ந்ததாக இருந்தது.

இந்த விபூதியை அணிந்து கொண்டால், தீவினை அகன்று, மனிதர்களை காப்பாற்றும் கவசமாய் இருப்பதுடன், செல்வத்தையும் தருவதாக மக்கள் நம்பிக்கையுடன் அந்த விபூதியை பெற்றுச் சென்றுள்ளனர்.

இது பொது விதியாக இருந்தாலும், சிலர் தங்கள் தேவைகளை, லட்சியங்களை நிறைவேற் றிடும் பொருட்டு வசிய விபூதியை உருவாக்கி பயன்படுத்தி இருக்கின்றனர்.

இத்தகைய வசிய திருநீற்றைத் தயாரிக்கும் பல்வேறு முறைகளை சித்தர்களின் நூல்களி லும், மலையாள மாந்திரிக நூல்களிலும் காண முடிகிறது.

அப்படியான ஒரு வசிய திருநீற்றினை தயாரிக்கும் முறையினை அகத்தியரின் "அகத்தியர் பரிபூரணம்" என்ற நூலில் இருந்து சேகரிக்கப் பட்ட தகவல்களை பார்ப்போம்.

கிருபையுள்ள புலத்தியனேவ சிய மொன்று
கெணிதமுடன் சொல்லுகிறே னன்றாய் கேளு
துருவமுள்ள வுருத்திரபூமி யிலே சென்று
சுகமாக வெந்தஅஸ்திநீயெ டுத்து மைந்தா
அருவமுள்ள அஸ்தியுடன் விஷ்ணு மூலி
ஆதிசத்தி தன்னுடைய வேருங் கூட்டிக்
கருவையினிச் சொல்லுகிறேன்க லசப் பாலாற்
கருணையுடன் றானரைத்தே யுண்டை செய்யே.
செய்யடா உருண்டைதனையு லர வைத்துச்
செம்மையுட னெருவடுக்கிப் புடத்தைப்போடு
மெய்யடா சொல்லுகிறே நீறிப் போகும்
வேகாந்த மானதொரு நீற்றை வாங்கி
வையடா சவ்வாதுடனேபு னுகு சேர்த்து
மார்க்கமுடன் அங்கெனவே லட்ச மோதி
மையமென்ற நெற்றியிலேவி பூதி பூசி
மார்க்கமுடன் அரசரிடஞ் சென்று பாரே.
சென்றுமிக நின்றுடனேயி ராச மோகம்
சிவசிவா செகமோகம்ஹ்ரீவ சிய மாகும்
அண்டர் பிரானருள் பெருகிவ சிய முண்டாம்
அப்பனே ஓம்கிலியு றீயு மென்று
பண்டுபோலி லட்சமுரு வேற்றிப் பின்னர்
பாலகனே லலாடமிசைப் பூசிச் சென்றால்
தொண்டரென்றே சத்துருக்கள்வ ணங்கு வார்கள்
துஷ்டனென்ற மிருகமெல்லாம்வ சிய மாமே.

–அகத்தியர்



இதன் விளக்கம் மிகத் தெளிவாக தமிழ் கற்ற அறிஞர்களிடம் இன்னும் விளக்கமாக தெரிந்து கொள்வது நலம் பயக்கும்.

எளிமையாக சுருக்கமாக இதன் விளக்கத்தைப் பற்றி நாம் பார்ப்போம்.

ஆதி குருவான சிவன் விரும்பி வசிக்கும் பூமியான இடுகாட்டிற்குச் சென்று எரியும் சுடலையில் இருந்து நன்கு வெந்த அஸ்தியை சேகரித்து எடுத்து வந்து, அதன் எடைக்கு சம அளவில் விஷ்ணு கிரந்தியின் வேரினைச் சேர்த்து கல்வத்தில் இட்டு அதனோடு தாய்ப்பால் சேர்த்து நன்கு அரைத்து உருண்டையாக செய்து கொள்ள வேண்டுமாம். இந்த உருண்டைகளை சூரிய ஒளியில் நன்கு உலரவிட்டு எடுத்து நான்கு வரட்டிகளைக் கொண்டு புடமிட வேண்டுமாம். இதனால் அந்த உருண்டைகள் வெந்து நீறாகி இருக்கும் என்கிறார். இந்த திருநீற்றுடன் சவ்வாதும், புனுகும் சேர்த்து ஒரு சிமிழில் சேகரித்துக் கொள்ள வேண்டுமாம்.

இந்த திருநீற்றில் இருந்து சிறிதளவு எடுத்து கைகளில் வைத்துக் கொண்டு "அங்" என்று லட்சம் உரு செபித்து பின்னர் அதனை நெற்றியில் பூசிக்கொண்டு அரசரிடம் சென்றால் அரசர்கள் வசியமாவார்களாம். இது இராஜவசியம் என்றும் அத்துடன் செக மோகமும் உண்டாகும் என்கிறார்.

மேலும் இந்த திருநீற்றில் இருந்து சிறிதளவு எடுத்து கைகளில் வைத்துக் கொண்டு "ஓம்கிலிறி" என்று லட்சம் உரு ஓதி நெற்றியில் விபூதியைப் பூசிக் கொள்ள வேண்டுமாம் அப்போது எதிரிகளும் வணங்கும் நிலை உண்டாவதுடன் தீங்கு செய்யும் விலங்குகளும் வசியமாகும் என்கிறார்.

அக்காலத்தில் இதுபோன்ற வசிய விபூதியின் தேவை அதிகம் இருந்தது, காட்டுவழிப்பயணத்தில் விலங்குகள், திருடர்களிடம் இருந்து காத்துக் கொள்ளவும், ராஜாங்க விஷயங்களுக்கும் இது போன்ற வசிய விபூதியை பயன்படுத்தினர்.

தற்போது இதுபோன்ற விபூதி தயாரிப்பு குறைந்தாலும், ஒருசில மந்திர தந்திரங்களுக்கு இன்றும் ஒருசிலர் வியாபார நோக்கத்தில் பயன்படுத்தி வருகின்றனர்.

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

# சுசீந்திரம் தாணுமாலயன் திருக்கோயில்

## மும்மூர்த்திகள் லிங்கமாக காட்சிதரும் கோயில்

## இன்றும் இரவில் இந்திரன் வழிபடும் தலம்

## இரண்டு வழிபாட்டுமுறை கடைபிடிக்கப்படும் ஒரே கோவில்

## தம்பதிகள் வழிபடவேண்டிய கோவில்



அத்திரி முனிவரும், அவருடைய இல்லத்தரசியும் கற்புக்கரசியுமான அனுசுயாவும் ஞானா ரண்யம் எனும் பழம்பெயர்பெற்ற சுசீந்திரத்தில் தவம் செய்தனர். இந்நிலையில், அத்திரி முனிவர் இமயமலைக்குச் சென்றார்.

அப்போது சிவபெருமான், விஷ்ணு, பிரம்மா ஆகிய முப்பெருங்கடவுள்களும் அனுசுயாவின் கற்பை சோதிக்க எண்ணி பிராமணர் வேடம் அணிந்து, அவருடைய ஆசிரமத்திற்கு வந்து உணவு தருமாறு வேண்டினர்.

அனுசுயாவும் உணவு படைக்கத் தொடங்கினார். அப்போது மூவரும், ”ஆடை அணிந்த ஒருவரால் உணவு பரிமாறப்படுமாயின் உணவு உண்ண ஆகாது” என்று கூறினர். இதைக் கேட்டு திடுக்கிட்ட அனுசுயாதேவி, தன் கணவர் திருவடி கழுவிய நீரை மூவர் மீதும் தெளித்தார். அவர்கள் மூவரும் பச்சிளங்குழந்தைகளாக மாறினர்.

பின்பு அந்தப் பச்சிளங்குழந்தைகளுக்கு உணவூட்டி, தொட்டிலிட்டு, தாலாட்டித் தூங்கச் செய்தாள். தங்கள் கணவர்கள் பச்சிளங்குழந் தையாக மாற்றப்பட்டதை அறிந்த மூவரின் தேவியரும் அங்கு வந்து அனுசுயாவிடம், தங்கள் கணவர்களை பழைய உருவிற்கு மாற்றித் தர வேண்டினர்.

தேவியர்கள் வேண்டுகோளுக்கிணங்கிய அனுசுயா முப்பெரும் கடவுளுக்கும் பழைய உருவைக் கொடுத்தாள். அப்போது திரும்பி வந்த அத்திரி முனிவரும் அனுசூயாவோடு சேர்ந்து, மும்மூர்த்திகளின் காட்சியைப் பெற்றார்.

இந்நிகழ்ச்சியை நினைவூட்டவே சுசீந்திரம் கோவில் கட்டப்பட்டுள்ளது என்கிறது இதன் தல வரலாறு.

அத்திரி முனிவரும், அனுசுயாவும் இங்குள்ள தல விருட்சமான கொன்றை மரத்தினடியில் நின்று வேண்ட மும்மூர்த்திகளும் காட்சி கொடுத்தனர்.

இதைக் குறிக்கும் விதமாக மும்மூர்த்திகளும் ஒரு முகமாய் தாணுமாலயன் என்ற பெயரில் இங்கு எழுந்தருளியுள்ளனர். சிவன் (தாணு), விஷ்ணு (மால்), பிரம்மா (அயன்) ஆகிய முப்பெருங்கடவுள்களும் சேர்ந்துள்ள இத்தல மூர்த்தி தாணுமாலயன் என அழைக்கப்படுகிறார்.

மூலவரான சிவலிங்கத்தை மூன்று பாகமாக பிரித்து வழிபடுகின்றனர்.

மேல் பாகம் .................... விஷ்ணு,
நடுப்பாகம் ......................... சிவன்,
அடிப்பாகம் ....................... பிரம்மா
என கருதப்படுகிறது.

தன்னுடைய அடியையும், முடியையும் காண முடியாத விஷ்ணுவுக்கும், பிரம்மனுக்கும், கார்த்திகை திருநாளில் தன்னை வழிபட்டதால், தனது முடியிலும், அடியிலும் இடமளித்து அருள்புரிந்தார் என்பதை சொல்லும்வகையில்தான் இங்குள்ள திருமேனி இருக்கிறது என்று ஒரு செவிவழி கதையுண்டு.

கற்பின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டி, முத்தொழில் புரியும் மூவரும் ஒருருவாக காட்சி தந்த புண்ணிய தலம். என்பதால் தம்பதி சகிதமாக வணங்க வேண்டும் என்பது ஐதீகம்.

**மாலை பூஜித்தவர் காலையில் அனுமதிப்பதில்லை**

இந்தக் கோவிலில் இந்திரன் வழிபடுவதாக ஒரு ஐதீகம் உள்ளது. இதை மெய்ப்பிக்கும் வகையில், ஒருமுறை மாலையில் செய்த அலங்காரங்களை எல்லாம் கலைத்து புதிய பூக்களை கொண்டு இரவில் இந்திரன் அங்கிருக்கும் மூலவருக்கு பூஜை செய்ததாக கூறப்படுகிறது.

மாலையில் பூஜை செய்தவர் அடுத்த நாள் காலை எல்லாம் மாறி இருந்ததை வெளியில் சொன்னாராம். அதிலிருந்து மலையில் பூஜை செய்த பூஜாரிகள் அடுத்தநாள் பூஜைக்கு அனுமதிப்பதில்லை.

அதேபோல் முன்பு கடுமையான நியதிகள் கடைபிடிக்கப்பட்டன. பூஜை செய்பவர்கள் ஒரு குறிப்பிட்ட நம்பூதிரி குடும்பத்தில் உள்ளவர்களாகவும் அவர்கள் பிரம்மச்சாரிகளாக மட்டுமே இருக்கவேண்டும் என்றும், அவர்களது வாரிசாக அவருடைய சகோதரியின் மூத்தமகன் அந்த பணியை செய்யவேண்டும் என்பது திருவிதாங்கூர் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நியதி.

தற்போது இத்திருக் கோவில் தமிழக அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இருப்பதால் இந்த நியதி கடைபிடிக்கப்படுகிறதா என்பது அறியமுடியவில்லை.

இந்த தாணுமாலயன் கோவில் இருக்கும் ஊரான சுசீந்திரம்




ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

என்ற பெயர் கிபி 941 ஆண்டுள்ள கல்வெட்டு ஒன்றில்தான் முதன்முதலில் சொல்லப்பட்டதாம்.

### தமிழ்–கேரள வழிபாட்டு முறை

இந்த தாணுமாலயன் திருக்கோவில் மலையாள –தமிழ் பண்பாட்டு இணைவின் அடையாளமாக இருக்கிறது. இக்கோயில் சோழர்கள் காலத்திற்கு முன்பு தொன்மையான வழிபாட்டு முறைகளைக் கொண்டிருந்தது.

இரண்டு வழிபாட்டுமுறைகளை கடைபிடிக்கும் ஒரே கோவிலாக சுசீந்திரம் தாணுமாலயன் கோவில் திகழ்கிறது.

இக்கோவில் கேரள மன்னர்களின் கட்டுப் பாட்டில் இருந்ததாகவும், அந்த சமயத்தில் கேரளத்தில் கடைபிடிக்கப்பட்டுவந்த தாந்த்ரீக வழிபாட்டு முறை கடைபிடிக்கப்பட்டுவந்ததாகவும் கூறப்படுகிறது.

சோழ மன்னர்கள் கேரளத்தைக் கைப்பற்றி இங்கிருந்த தாந்த்ரீக வழிபாட்டுமுறைகளை ஒழித்து தமிழகத்தில் கடைபிடிக்கப்பட்ட ஆகம வழிபாட்டு முறையை புதிதாக புகுத்தினார்கள்.

காலப்போக்கில் மீண்டும் கேரள மன்னர் களின் ஆட்சி உருவானபோது ஆகம முறைகள் மீண்டும் தவிர்க்கபட்டு தாந்த்ரீக முறை வழிபாடு கொண்டுவரப்பட்டது.

ஆனால் சோழர்கள் உருவாக்கிய சடங்கு களும் மரபுகளும் நீடித்தன. ஆகம – தாந்த்ரீக முறைகளின் கலவையாக வழிபாட்டு முறைகள் செய்யப்பட்டன.

11 ஆம் நூற்றாண்டுமுதல் 1956 வரை தொடர்ச்சியாக மலையாள ஆட்சியில் இக்கோயில் இருந்துவந்திருக்கிறது. 800 ஆண்டுகளுக்கும் மேலாக மலையாளப் பிராமணர்களான நம்பூதிரி களின் நேரடி நிர்வாகத்தில் இருந்து வந்தது. ஆனால் இக்கோயிலின் தமிழ்த்தன்மைகள் அப்படியே கடைபிக்கப்பட்டன.

### கீழ்நோக்கி பார்க்கும் நவக்கிரகங்கள்

வழிபாட்டில் ஞானசம்பந்தருக்கும் மாணிக்க வாசகரின் பதிகங்களுக்கும் முக்கியத்துவம் தரப் படுகின்றன.

திருக்கோவிலின் நுழைந்தவுடன் முதல் தரிசனம் தட்சிணாமூர்த்தி தரிசனம். அடுத்து ஆதிசன்னிதி எனப்படும் கொன்றையடியில் உள்ள மும்மூர்த்திகளை வழிபட வேண்டும். வெளியே வரும்முன் நந்தியின் முன்பு இந்திர விநாயகர் சன்னதி. தத்தாத்ரேயர் சன்னதி, மூலக்கோவிலில் சுப்ரமணிய சுவாமி, நடராஜர், திருவேங்கட விண்ணகர பெருமாள், பள்ளிக்கொண்ட பெருமாள், கொன்றையடி தாணுமலயான். சன்னதிகளை வழிபடவேண்டும்.

இத்திருக்கோவிலில் நவகிரகங்கள் வசந்த மண்டபத்தின் மேல் தளத்தில் உயரே உள்ளது.

இது சிவனும் பார்வதி தேவியும் இக்கோவிலில் அமர்ந்து யாகம் செய்தபோது நவகிரகங்கள் மேலிருந்து கீழ் நோக்கி வழிப்பட்டதால் எல்லா நவக்கிரங்கங்களும் கீழ்நோக்கி பார்க் கின்றார்கள் என்பது ஐதீகம்.





தாணுமாலய சுவாமி கருவறை கோஷ்டத்தின் பின்புறம், உள்பிரகாரத்தில் மரச்சட்டத்தினால் ஆன 27 நட்சத்திர தீபக்குழிகள் இருக்கின்றன.

### ஜாதக தோஷம் தீர

கார்த்திகை திருநாள் மற்றும் பவுர்ணமி நாட்களில் தூய பசுநெய் கொண்டு, தாமரைத் திரி போட்டு, 27 நட்சத்திர தீபக் குழிகளிலும் தீபமேற்றி வழிபட்டால், ஜாதகத்தில் உள்ள தோஷங்கள், நம் கர்மவினைகள் யாவும் நீங்கும் என்பது நம்பிக்கை.

கருவறை கோஷ்டத்தைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் உள்ள விநாயகரையும், சங்கர நாராயணரையும் தொடர்ந்து 8 பவுர்ணமி நாட்கள், 5 அகல் விளக்கில் நெய் தீபம் ஏற்றி வழிபட்டால், தடைகள் அகன்று சுபகாரியங்கள் சீக்கிரம் நடைபெறும் என்பது நம்பிக்கை.

### 18 வருடமாக எரியும் விளக்கு

குலசேகர ஆழ்வார் மண்டபத்தில் சங்கீதத் தூண்கள் உள்ளன.அதன் நடுவே 18 வருடங்களாக தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும் அணையா விளக்கு காடா விளக்கு எரிந்துகொண்டுள்ளது

### கடலில் கலக்கும் தீர்த்தம்

சுசீந்திர தாணுமாலயனுக்குத் திருமுழுக்காட்டு நடைபெற்றதும் அப்புனித நீர் நிலத்தடியே சென்று கன்னியாகுமரிக் கடலில் ஓர் இடத்தில் கலக்கிறது. அது “தாணுமாலயத் தீர்த்தம்” என அழைக்கப்படுகிறது. முன்பு இருந்தவர்களுக்கு தீர்த்தம் கலக்கும் அந்த இடம் பற்றி தெளிவாக தெரியுமாம். இப்பொழுது அதுபற்றி அறிந்தவர்கள் குறைவு என்றே சொல்கிறார்கள்.

அடுத்து சித்திர சபையில் சுவற்றை ஒட்டி, இராமபிரானின் கருவறைக்கு எதிரில் மிகப்பெரிய அனுமன் சிலை காணப்படுகிறது. மூலதிருநாள் மகாராஜா காலத்தில் சுசீந்திரம் மேலக்கோபுரம் விரிவுபடுத்த அஸ்திவாரம் தோண்டியபோது கிடைத்த மாபெரும் ஒற்றைக்கல் அனுமார் சிலை கிடைத்தது. இதற்கும் ஒரு சுவராஷ்யமான வரலாறு உண்டு அதை மேலே தனியா பெட்டிச் செய்தியில் படிக்கவும்.

## நோய்கள், கிரக தோஷங்கள் தீர்க்கும் அனுமனை மீட்கப்பட்ட வரலாறு

1740 ஜனவரி மாதம் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மா மகாராஜாவின் படைவீரர்களின் ஒரு பிரிவினர் குளச்சலில் டச்சுப்போர் வீரர்களுடனும், மற்றொரு பிரிவினர் வடக்கே காயங்குளம் மன்னரிடமும் போரிட்டு கொண்டிருந்த சமயம் பார்த்து ஆற்காடு நவாப்பான சந்தாசாகிப் அவரது சகோதரர் போடாசாகிப் மற்றும் படைத்தளபதி சப்தர் அலிகான் ஆகியோர் நாஞ்சில் நாட்டை நோக்கி தந்திரமாக குறுக்குவழியில் படையெடுத்து வந்தனர்.

ஈத்தங்காடு என்னுமிடத்தில் வந்தபோது அன்றைய வட்டப்பள்ளி ஸ்தானிகர் தலைமையில் ஊர் பொதுமக்கள் சேர்ந்து கடும் சண்டை நடத்தினர்.

இதில் வட்டப்பள்ளி ஸ்தானிகர் உட்பட பொதுமக்கள் பலர் சரியான ஆயுதங்கள் இல்லாமையால் முஸ்லீம் படைகளால் கொல்லப்பட்டனர். குறுக்கு வழியில் வெற்றியடைந்த நவாப் தனது படையோடு பழையாற்றை கடந்து சுசீந்திரத்தை வந்தடைந்தான்.

மார்கழி திருவிழா முடிந்து மிக கம்பீரமாக நின்று கொண் டிருந்த அன்றைய சுவாமி தேரை தீயிட்டு கொளுத்தினான்.



மேலும் கோயிலின் உட்பகுதிகளை சேதப்படுத்தின கயவர்கள் கூட்டம்.

ஈத்தங்காட்டில் போர் நடந்து வந்த வேளையில் உள்ளூர் பொதுமக்கள் கோயில் சம்பந்தப்பட்ட பொருட்களை கருவறைக்குள் இட்டு பூட்டி சுவரெழுப்பி பாதுகாத்தனர்.

அந்த சமயம் 18 அடி உயரமுள்ள ஆஞ் சநேயர் சிலையை காப்பாற்ற மண்ணுக்குள் புதைத்து மறைத்து வைத்தனர் அதன் பிறகு 2 நூற்றாண்டுகளாக புதைந்து கிடந்த ஆஞ்சநேயரை பற்றிய தகவல் யாருக்கும் தெரியவில்லை.

சி.பி.ராமசாமி ஐயர் திவானாக இருந்த சமயம், எம்.கே.மாங்கொம்பு நீலகண்ட ஐயர் தேவஸ்தான கமிஷனராகவும், கேரளவர்மா கண்காணிப் பாளராகவும், பரமேஸ்வர சர்மா வட்டப்பள்ளி மடம் ஸ்தானிகராக இருந்த சமயம் ஆஞ் சநேய சுவாமி மண்ணிற்குள் இருந்து எடுக்கப் பட்டு, வடகிழக்கு மூலையில் ராமபிரானின் எதிரே 1930 மே 2ம்தேதி (1105சித்திரை19) நிறுவப்பட்டார்.

18 அடி உயர இந்த ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சாத்தி வழிபட்டால், உடல் நோய்கள், கிரக தோஷங்கள் அகலும். செவ்வாய், சனி, மூல நட்சத்திர நாள், அமாவாசை நாட்களில் வெண்ணெய் சாத்தி வழிபடுவது உகந்தது.



கோவிலின் உள்பிரகாரத்தில் இருக்கும் இந்த தூண்களை தட்டினால் ஒவ்வொரு ஸ்வர ஓசைவரும்.




இதுதான் கோவிலின் நுழைவாயில். இருக்கும் யாழி சிற்பத்தின் வாயினுள் ஒரு கல் உருண்டு கொண்டுவரும். ஆனா, வெளியேவராது. இதை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை உருட்டி பார்த்து விளையாடுவார்கள், ஆனால் காலப்போக்கில் தற்போது இந்த யாளி சிற்பத்தில் கயிறு கம்பி போன்றவை கட்டப்பட்டு சரித்திரம் வாய்ந்த சிற்பங்கள் தற்போது கொடி கட்டும் கம்பியாக மாறி காட்சிதருவது வேதனையாக உள்ளது.




சுசீந்தரம் தானுமலையான் கோவிலில் வெள்ளை நிறத்தில் 12 அடி உயரமுள்ள வெள்ளை நந்திசிலை காணப்படுகிறது. இந்த நந்தி சிலை சங்கால் அரைத்து செய்யப்பட்டது என்று கூறுப்படுகிறது.



## சிறு தகவல்கள்

- தாணுமாலயன் திருக்கோயில் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது.
- பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளை ஒன்றாக வழிபடும் ஒரே கோவிலும் இது தான்.
- மகரிஷிகள், துறவியர்கள், சுற்று வட்டாரத்தை ஆண்ட சிறுதலைவர்கள், சிற்றரசர்கள், முன்கால சேர, சோழ, பாண்டிய நாட்டு அரசர்கள், வேணாட்டு அரசர்கள், சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சி யாளர்கள், பிற்கால சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், விஜயநகர மன்னர்கள், தலைவர்கள், திருமலை நாயக்கர்கள், ராணி மங்கம்மாள், திருவிதாங்கூர் மன்னர்கள், முன்னாள் கோவில் நிர்வாகிகளாக இருந்த யோகஸ்தானிகர்கள், ஊர் தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோரால் இந்த அழகான கோவிலின் பல பாகங்கள் பல காலங்களில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது.
- கொன்றையடி மிகவும் பழமை வாய்ந்தது. அங்குள்ள கொன்றை மரம் 2000 வருடங்களுக்கு முன் உயிருடன் இருந்ததாக ஆராய்ச்சியில் அறியப்பட்டது. ஆலயத்தின் உள் கருவான இந்த மரத்தை வைத்துதான் இந்த கோவில் எழுந்துள்ளது.
- முக்கிய மூலஸ்தானமாகிய கோவில் சுயம்பு வாக கருதப்படுகிறது.
- வடகேடம் என்ற அதில் தாணுமாலய மூர்த்தியாக வழிபட்டு வருகிறார்கள்.
- தெக்கேடம் என்ற மகாவிஷ்ணு திருவெங்கட பெருமாளாக காட்சி தருகிறார்.
- பாறையின் மேல் உயரமாக அமைந்துள்ள கைலாயநாதர் கோவில் மண்டபம் 5ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.
- 1238–ஆம் ஆண்டு சுப்பிரமணியசுவாமி கோவில் கண்டியூர் உண்ணி என்பவரால் கட்டப்பட்டு அதன் நித்திய செலவுக்கு பல்வேறு அசையும் அசையா பொருட்கள் கோவிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- அறம் வளர்த்தம்மன் கோவில் 1444–ஆம் ஆண்டு தேரூரில் உள்ள பள்ளியறை நாச்சி யார் குடும்பத்தாரால் கட்டப்பட்டதாகும்.
- வீர பாண்டியன் மணி மண்டபத்திற்கு முன்பாக மிகப்பெரிய அரிய வகை கலை சிற்பங்கள் நிறைந்த செண்பக ராமன் மண்டபம் வேணாட்டு ராஜாவான ராமவர்ம ராஜாவால் 1471–ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.
- 1545–ஆம் ஆண்டு மிகவும் எழில்மிக்க ராஜகோபுரம் விஜயநகராட்சி காலத்தில் வித்தல மகாராஜாவால் கட்டப்பட்டது.
- 1888–ஆம் ஆண்டு மின்னல் தாக்கியதால் கோபுரம் சீர் செய்யப்பட் டது.
- 1587–ஆம் ஆண்டு கோவில் நிர்வாகிகளான யோகஸ்தானிகர் தெற்கு மண்டபத்தில் புருஷோத்தமரு நீலகண்டரு என்பவரால் பெரிய பிள்ளையார் கோவில் கட்டப்பட்டது. முக்குறுணி பிள்ளையார் என்று கூறும் அந்த கணபதியின் நித்திய செலவுக்கு தேவையான வஸ்து வகைகளையும் விட்டுக் கொடுத்துள்ளார்.
- அதனால் அது “நீலகண்ட விநாயகர்” என்று இப்போதும் அழைக்கப்படுகிறது. அவரது செயல்களை பெருமைப்படுத்த கோவில் மேலாளர் அலுவலகத்திற்கு முன்னால் தெற்கு பக்கமாக அவரது சிலை வைக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரியிலிருந்து 13 கிலோ மீட்டர், நாகர் கோயிலில் இருந்து 7 கிலோ மீட்டர் தொலை விலும் சுசீந்திரம் தாணுமாலயன் திருக்கோயில் அமைந்துள்ளது.


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033



# பெருமாளின் பல்லக்கு

## சுவாரஸ்யமான தகவல்கள்

சிவன் கோவிலில் சிவபெருமானை பெரும்பாலும் பல்வேறு வாகனங்களில் ஊர்வலமாக அழைத்துவருவார்கள். ஆனால் பெருமாள் கோவில்களில் பெரும்பாலும் பெருமாள் பல்லக்குகளில் வருவதையே பார்த்திருப்போம். இந்த பல்லக்கு பற்றி விரிவாக பார்ப்போம்.

பெரும்பாலும் பெருமாள் கோவில்களில் உள்ள பல்லக்கிற்கு **'தோளுக்கினியான்'**என்ற பெயர் இருக்கும்.

பல்லக்குத் தூக்கிகளுக்கு **'ஸ்ரீபாதம் தாங்கிகள்'** என்று தனிப் பெயரே உள்ளது.

பெருமாள் புறப்பாட்டின் ஆரம்பம், ஒரு கருடன் எப்படி சட்டென தன் சிறகை விரித்துப் பறக்குமோ அதுபோன்றே புறப்படும். இதை **கருடகதி** என அழைப்பார்கள்!

அதையடுத்து குகையில் இருந்து வெளியே வரும் ஒரு சிங்கம் எப்படி தன் இடப்பக்கமும் வலப்பக்கமும் தலையை லேசாகத் திருப்பி ஏதாவது அபாயம் உண்டா எனப் பார்த்துவிட்டுப் பின் சிங்கநடை போடுமோ அதுபோல ஸ்ரீபாதம் தாங்கிகள் நம்பெருமாளை கர்பக்கிரகத்திலிருந்து வெளியே தோலுக்கினியானில் (பல்லக்கில்) தூக்கிப் புறப்படுவது **சிம்மகதியாம்.**

இதைத்தொடர்ந்து புலிபோல இரண்டுமூன்று அடி எடுத்து வைப்பது பின் நிறுத்துவது, மீண்டும் இரண்டு மூன்று அடியெடுத்து வைத்துப் போவதை **வியாக்ரகதி** என்கிறார்கள்.

அதையடுத்து காளைமாடுபோல மணியோசையுடன் நடப்பதை **ரிஷபகதி** என்றும் ஆண் யானைபோல நடப்பதை **கஜகதி** என்றும் சொல்கிறார்கள்.

புறப்பாடு முடிந்து திரும்பி வந்து கர்ப்பகிரகத்தில் நுழையும்போது எப்படி ஒரு பாம்பு தன் புற்றுக்குள் நுழையூம் முன்பு தன் தலையை சற்று தூக்கிப் பார்த்துவிட்டு பின் சட்டென கடிதில் உள்ளே நுழையுமோ அவ்விதம் நுழைவதை **சர்பகதி** என்கிறார்கள்.

கடைசியாக, எப்படி ஒரு அன்னப் பறவை தன் சிறகை சட்டென மடித்துக்கொண்டு உட்காருமோ அப்படி உள்ளே நுழைந்த பெருமாளை சட்டென அமர வைப்பதை **ஹம்சகதி** என்று பெயரிட்டு வைத்திருக்கிறார்கள்.

**ஆயக்கால்:** 'ஏன் ஸ்ரீபாதம்தாங்கிகள் வழியில் வெறுமே நிற்கும்போதுகூட சற்றே இடது புறமும் வலதுபுறமும் சாய்ந்துசாய்ந்து பெருமாளை தாலாட்டிக் கொண்டே இருக்கிறார்கள் ஆயக்கால் போட்டு நிறுத்திவிட வேண்டியதுதானே? என்று எண்ணத் தோன்றும்.'

ஆயக்கால் என்பது ஊர்வலத்தின் இறைவனை சுமந்து வருபவர்கள் ஏதேனும் காரணத்திற்கு நிற்க நேர்ந்தால் நான்கு பக்கங்களிலும் மரத்தால் ஆன தாங்கிகளின் மூலம் நிறுத்தி வைப்பதை ஆயக்கால் என்று கூறுவார்கள்.

பெரும்பாலும் பெருமாள் கோயில்களில் ஆயக்கால் போட்டு நிறுத்துவது வழக்கமில்லையாம்! பெருமாள் பாரத்தைஒரு பாரமாக நினைப்பது தவறாம்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் முன்னே செல்லும் அறையர்சாமி ஸ்ரீபாதம் தாங்கிகளுடைய ஆட்டத்திற்கு ஏற்றதுபோல் இசைத்துக் கொண்டும் பாடிக் கொண்டும் செல்ல, தீப்பந்தம் பிடிப்போர் குடைபிடிப்போர் வெள்ளித்தடி ஏந்துவோர் ஆளவட்டப் பரிகாரகர் போன்றோரும் அதேகதியில் ஆடிக்கொண்டு செல்ல வேண்டுமாம்!

இதேப்போன்று பெருமாளுக்கு விசிறி வீசுபவர் தவிர பெருமாள் சேஷவாகனம், கற்பகவிருட்ச வாகனம், யானை, பசு, வையாளிவாகனம் ஆகியவற்றில் பயணிக்கும் பொழுது அதற்கு ஏற்றதுபோல எல்லா கதிகளும் மாற்றப்படுமாம்.

உதாரணமாக வையாளி வாகனத்தின் பொழுது அதாவது குதிரை வாகனத்தின் பொழுது இரண்டு நடை வேகமாகச் சென்றுவிட்டுப் பின் ஒருமுறை இடப்புறமாக சுற்றிவிட்டு அடுத்து ஒருமுறை வலப்பக்கமாகச் சுற்றிவிட்டு மீண்டும் இரண்டுநடை தோளுக்கினியானைத் (பல்லக்கை) தூக்கி நடப்பார்களாம்.

சரி, எப்படி இந்த இளைஞர்களால் இப்படி தேர்ந்த நடனக் கலைஞர்களைப்போல இந்த அளவுக்கு அப்படித் தாளம் தப்பாமல் ஆடிக் கொண்டே பல்லக்கைத் தூக்கிச் செல்ல முடிகிறது என்ற கேள்வி எழும். ஸ்ரீரங்கம் போன்ற மிகப்பெரிய பெருமாள் கோவில்களில், அக்காலத்தில் இந்தப் பணிக்கு அத்தனை எளிதில் ஆளை நியமித்துவிட மாட்டார்களாம்.

முதலில் சில இளைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இடதுதோள் பழக்கமா வலதுதோள் பழக்கமா என்ன உயரம் என்பதையெல்லாம் கவனித்து அதன்பிறகு அவர்களுக்கு வெறும் தோளுக்கினியானைத் தூக்கிக்கொண்டு காவிரி மணலில் பல மாதங்கள் பயிற்சி எடுக்கச் சொல்வார்களாம். அவர்கள் தேர்ந்த ஸ்ரீபாதம் தாங்கிகளாக ஆகிவிட்டார்கள் என்று நிர்வாகத்திற்கு சமாதானம் உண்டானால்தான் அவர்கள் அந்தப் பணிக்கு அமர்த்தப்படுவார்களாம்.



# மகாபாவியானாலும் அதை மறந்து விடுங்கள்

84
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் அருளுகிறார்: "நீங்கள் உங்களை ஒரு பாவியாக எண்ணாதீர்கள். நீங்கள் தெய்வீகத் தந்தையின் ஒரு குழந்தை. நீங்கள் மகாபாவியாக இருந்தாலும் சரி, அதை மறந்து விடுங்கள். நல்லவராக இருக்க வேண்டும் என்று நீங்கள் முடிவு செய்துவிட்டால். அதன் பிறகும் நீங்கள் ஒரு பாவியல்ல. "முழுவதும் தீங்கையே செய்யும் ஒருவன்கூட அதிலிருந்து விடுபட்டு, என்னையே பிரத்தியேகமாகத் தொழுதால், தனது நல்ல தீர்மானத்தின் காரணமாக நல்லவர்களுள் ஒருவனாகக் கருதப்படுவான். அவன் விரைவில் நல்லொழுக்கம் உடையவனாகி முடிவற்ற அமைதியை அடைகிறான். எனது பக்தன் ஒருபோதும் அழிவதில்லை என்பதை அனைவருக்கும் சொல், ஓ அர்ஜுனா!" (பகவத் கீதை அத்.9 ஸ்லோகம் 30, 31) பழையவற்றை மறந்துவிட்டு, புதிதாகத் தொடங்கிக் கூறுங்கள்.

"நான் என்றும் நல்லவனாகவே இருந்திருக்கிறேன். நான் கெட்டவன் என்று கனவு மட்டுமே கண்டு கொண்டிருந்தேன்." தீமை என்பது ஒரு கெட்ட கனவு. அது ஆன்மாவிற்குச் சொந்தமானதல்ல என்பது முற்றிலும் உண்மை."

"சபலம் என்பது சர்க்கரைப் பூச்சு கொண்ட நஞ்சு; அதன் ருசி சுவை யானது. ஆனால் மரணம் நிச்சயம். இந்த உலகில் மக்கள் எதிர்பார்க்கும் மகிழ்ச்சி நிரந்தரமாக நீடிக்காது. இறை ஆனந்தம் முடிவற்றது. எது நீடித்து நிலைக்குமோ அதை விரும்புங்கள். இந்த வாழ்க்கையின் நிரந்தரமற்ற இன்பங்களை, கல் இதயத்துடன் உதறித்தள்ளுங்கள். நீங்கள் அப்படித்தான் இருக்க வேண்டும். இந்த உலகம் உங்களை ஆள அனுமதிக்காதீர்கள்.

இறைவன்தான் ஒரே ஒரு சத்தியம் என்பதை என்றும் மறக்காதீர்கள். உங்களுடைய பிரபஞ்சத்தந்தையின் உண்மையான அன்பு, உங்கள் இதயத்தில் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருக்கிறது. நீங்கள் இறை அனுபவம் அடைவதில்தான் உங்களுடைய உண்மையான ஆனந்தம் அடங்கியுள்ளது."

மேலும் அவர் தொடர்கிறார்: "நோய், துன்பம், வறுமை ஆகியவற்றினால், தான் துன்புறுவதாகக் கற்பனை செய்துகொண்டு, ஓர் அறியாமைக் கனவில் மனிதன் மூழ்கியுள்ளான். ஒரு சமயம் ஒரு பெரிய மகானான அரசர் ஜனகர் ஆழ்ந்த பிரார்த்தனையில் இருந்தபோது, திடீரென அவர் கூவினார்: " இன்று யார் உள்ளார் என் கோவிலில்? அது நானேதான் என நினைத்திருந்தேன். ஆனால் அங்கு நித்திய மெய்ப்பொருளைக் காண்கிறேன். இந்த சிறிய நான், இந்த தேக எலும்புகளின் பொட்டலம், நானல்ல. எனது தேகத்தலுள்ளது எல்லையற்ற பரம்பொருளே. என்னை நானே வணங்கிக்கொள்கிறேன்." என்றாவது ஒரு நாள் அந்த ஞானம் உங்களுக்கு ஏற்படும். நீங்கள் அதன்பிறகு உங்களை ஓர் அழியும் மனிதனாக, ஓர் ஆணாகவோ, அல்லது பெண்ணாகவோ நினைக்க மாட்டீர்கள். நீங்கள் இறைவடிவத்தல் படைக்கப்பட்ட ஓர் ஆன்மா என்றும் அறிவீர்கள்."

"ஆசைகள், சபலங்கள், தொல்லைகள் மற்றும் கவலைகள் ஆகியவற்றாலான ஒரு சங்கிலியால் ஆன்மாவானது தேகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. அது தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிறது. உங்களை அழியும் மானிட உணர்வு நிலையில் பிடித்து வைத்துள்ள அந்தச் சங்கிலியை நீங்கள் பலமாக இழுத்த வண்ணம் இருந்தால், ஒரு நாள் கண்ணிற்குப் புலப்படாத ஒரு தெய்வீகக் கரம் தலையிட்டு அதை அறுத்துவிடும். நீங்கள் விடுதலை பெறுவீர்கள்."

"சபலத்திலிருந்தும், துக்கத்திலிருந்தும், பகுத்தறிவு மற்றும் இறைத்தொடர்பு மூலம் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். பகவத் கீதையில் பகவான் கூறுகிறான், " அனைத்து படைப்பினுடைய சிருஷ்டி கர்த்தாவாக எனது பர சொரூபத்தை அறியாத அறிவிலிகள், மனித வடிவத்திலுள்ள எனது இருப்பை புறக்கணிக்கிறார்கள்," (பகவத்கீதை அத்.9 ஸ்லோகம்.11) தியானம் என்பது, நீங்கள் வரையறுக்கப்பட்ட இந்த



பூத உடல் அல்ல, மாறாக, எல்லையற்ற பரம்பொருள் என்பதை உங்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டுவதுதான். தியானம் என்பது உங்களுடைய உண்மையான ஆன்ம நிலையை விழிப்பூட்டுவதும் நீங்கள் யார் என்று உங்களைகற்பனை செய்து கொண்டிருக்கிறீர்களோ அதை மறக்கச் செய்வதும்தான். குடிபோதையிலுள்ள ஓர் அரசகுமாரன் சேரிக்குச் சென்று, தனது உண்மையான அடையாளத்தை

மறந்து” நான் எவ்வளவு ஏழை” எனப் புலம்ப ஆரம்பித்தால், அவனுடைய நண்பர்கள், நீ ஓர் அரச குமாரன் என்பதை நினைவில்லை” எனக் கூறுவர்.”

“இதைப்போன்றே நீங்களும் உங்களை, தத்தளித்துக்கொண்டும் இழிந்த நினைவிலும் உள்ள ஒருமானுடன் என்று எண்ணிக்கொண்டு சித்தப்பிரமை பிடித்த நிலையில் உள்ளீர்கள்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் அமைதியாக அமர்ந்து, ஆழ்ந்த நம்பிக்கையுடன் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் “பிறப்பு, இறப்பு, குலம்யாதுமில்லை, தாயும் தந்தையும் யாருமில்லை. தூய ஆன்மா அவனே நான். நான் எல்லையற்ற ஆனந்தம், (அத்வைத வேதாந்தத்தில் இணையற்ற வியாக்கியானராகிய ஸ்வாமி சங்கரருடைய (ஆதிசங்கரர்) புகழ்பெற்ற கீதத்திலிருந்து) இந்த எண்ணங்களை மீண்டும் மீண்டும் இரவும் பகலும் நீங்கள் எண்ணிய வண்ணம் இருப்பீர்களானால், முடிவில் உங்களை ஓர் அழியாத ஆன்மா என்று உள்ளபடி அறிந்துகொள்வீர்கள்,” இவ்வாறு குருதேவர் கூறுகிறார்.

“நீங்கள் ஒரு மகாபாபியானாலும் அதை மறந்து விடுங்கள்” என குருதேவர் கூறுகிறார். தவறு செய்பவர்களின் மனநிலை இரண்டுவிதம். ஒன்று, ஒன்றுமே தெரியாத ஒருவன் தவறு செய்கிறான். மற்றொன்று இறைவனை உணர்ந்தறிந்த ஒரு மனிதன் தவறு செய்கிறான். இதில் இரண்டாவதாகக் கூறியது எல்லாம் தெரிந்த ஒருவர் செய்யும் தவறு விரும்பத்ததக்கதல்ல. சாதாரண மனிதர்கள் செய்யும் தவறு அறியாமையினால் செய்வது. ஒரு சிறு குழந்தை செய்கின்ற தவறுக்கும் ஒரு பெரிய மனிதன் செய்யும் தவறுக்கும் வித்தியாசம் இல்லையா? யாராக இருந்தாலும் தம் தவறுகளை, “தாம் செய்வது தவறுதான்” என்று உணரும்போது கண்டிப்பாக மன்னிப்பு உண்டு. சாதாரண மனிதர்கள் தம் தவறை உணர்வதற்கு காலதாமதம் நேரும். அதே சமயம் இறைவனை அறிந்த, எல்லாம் தெரிந்தவர்கள் செய்யும் தவறை சீக்கிரமாகவே உணர முடியும். தவறை உணரும்போது மனம் மிகவும் வேதனைப்படும். அப்பொழுது இறைவனிடத்தில் தவறை மன்னிக்கக் கோரலாம். அதுதான் பகவத் கீதையிலும் கூறியுள்ளது.

அபிசேல் ஸுதுராசாரோ பஜதே
மாமனன்யபாக்
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யவ்யவ
ஸிதோ ஹிஸ:

ஏராளமான பாவங்களைச் செய்து மகாபாபியான ஒரு நீசன்கூட எந்த ஒரு நொடியில் இறைவனிடத்தில் முழுமையாக சரணாகதி அடைந்து அவனிடத்தில் அடைக்கலமாகிறானோ அந்த நொடியிலிருந்து அவனை நல்லவனும் பக்தனுமாகக் கருதவேண்டும். காரணம் பகவான் கருணையின் சிகரம். அடைக்கலமாகின்றவர்களை ஆதரிப்பவன். இறைவனிடத்தில் உண்மையிலேயே யார் அடைக்கலமாகின்றானோ அவன் எப்படிப்பட்டவனானாலும் இறைவன் அவனை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிக்கிறான். அதுதான் இறைவனின் தன்மை.

இறைவன் ஏற்றுக்கொண்டால், எதிர்பாராமலே பகவத் ஸ்வரூபர்களான பக்தர்களின் தொடர்பு கிடைக்க நேரும். சத்சங்கத்தாலும் காலத்தின் மாற்றத்தாலும் அவனுடைய புத்தியிலுள்ள அழுக்குகள் மாறி சித்தசுத்தி வந்து தனிமையை நாடுவான். அதனால், எவ்வளவு கெட்ட நடவடிக்கை உள்ளவனானாலும் இறைவனை அடைக்கலம் கொள்ள ஆரம்பிக்கும்போது சான்றோர்கள் அவனை மதிக்கின்றனர். அவன் லட்சியத்திற்குப் புறப்படத் தொடங்குகிறான். பின்னர் அவனுக்கு பாதை சரியாக வேண்டும். நாளடைவில் சத்சங்கத்தால் அதுவும் சரியாகிவிடும். எனவே எப்படிப்பட்டவர்களானாலும் உண்மையாகவே அவர்கள் இறைவனிடத்தில் சரணாகதி அடைந்தவர்களானால் அவர்களை சான்றோர்கள் என்று கூறவேண்டும். (பகவத் கீதை அத்.9 ஸ்லோகம் 30)

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”

aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக
டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா சச்வச்சாந்திம்
நிகச்சதி
கௌந்தேய ப்ரதிஜானீஹி ந மே பக்த:
ப்ரணச்யதி.

ஆனால் இறைவிதிமுறைகளை நன்கு அறிந்து தவறின்றிச் செய்பவர்களானால் அவர்கள் மிக வேகமாக பரம சாந்தியை அடைவர். விவேகமோ, தேவையான ஆசரணமோ (செயல்பாடு) இல்லையெனில், மேலே கூறியுள்ள பலனை அடைவதற்கு காலதாமதம் நேரிடும் என்பதுதான், சிறிதளவாவது இறைவனை சேவித்துள்ள பக்தன் ஒருக்காலும் அழிந்து விடமாட்டான். அதற்குண்டான நன்மையும் இறை அருளும் உண்டு. தினந்தோறும் சிறிது சிறிதாக இறைவனை உபாசனை செய்கின்ற ஒரு பக்தன் எவ்வளவு அறிவிலி ஆனாலும் காலத்தால் சித்தசுத்தி பெற்று இறைதர்மங்களை நன்கு அறிந்து கடைபிடிப்பதற்கான சக்தியும் பக்திஞான வைராக்கியமும் முழுமையாகக் கிடைக்கப்பெறுகிறான். அவனுடைய கர்மாவுக்கேற்ப குறிக்கோளை அடைய காலதாமதம் நேரிடும். சாதாரண உலக வியாபாரம் போலுள்ள தனது பகவத் பஜனம், உலக வியாபாரம் முழுமையாகச் செய்யாமல் பாதி செய்வதால் எந்தப் பயனும் இல்லை. செய்கின்ற பணிகளைச் சரியாகச் செய்யாததால் பலன் கிடைக்காமல் அழிந்துப் போவதைக் காணலாம். ஆனால் இறைவனை பஜிப்பது என்பது அவ்வாறன்று, குறைவாகச் செய்தாலும் அதற்கு அழிவில்லை. அதற்கும் பலன் கிடைக்கும். அதனால் பகவானை நேரம் கிடைக்கும்போதெல்லாம் பஜிப்பது எப்பொழுதும் நன்மைதான். (பகவத் கீதை அத்.9 ஸ்லோகம் 31)

இவ்வாறு பகவத் கீதையில் கூறியவாறு இறைவனை சேவிப்பது அல்லது பஜிப்பது என்பது எப்பொழுதும் நன்மையைத்தான் தருகிறது. அதே சமயம் இறை அருளும் கிடைக்கப்பெறலாம். அதனால்தான் “மகாபாபியானாலும்கூட இறைவனிடம் சரணாகதி அடைந்தால் அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகிறான்” என்று குருதேவர் கூறுகிறார். மிகவும் மிக கோன்னதமான பணியே இறை சேவை. இறைவன்தான், அவன்மட்டும் தான் இந்தப்பிரபஞ்சத்திற்குத் தலைவனும் தந்தையும். அவன் மட்டும்தான் இப்பிரபஞ் சத்தைத் தாங்குகிறான். அவன் மட்டும்தான் அனைவரையும் காத்துரட்சிக்கிறான். அவன் மட்டும்தான் நமக்கு வேண்டியதனைத்தையும் தந்து அருள்பாலிக்கிறான். அப்படிப்பட்ட இறைவனை அனைவரும் உபாசித்துதான் ஆக வேண்டும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909


ஆன்மிகமலர் மெயில் புக்
16-30 ஜூன் 2020 21
www.aanmeegamalar.com

# நாட்டுப்பற்றும் ஆன்மிகமும்

ஆன்மிகத்தில் நமக்கு விருப்பம் ஏற்பட்டுவிட்டால் சித்தனாக மாறலாம் அல்லது பித்தனாகவும் மாறலாம், ஆனால் இந்த நிலை அடைவதற்கு பல நிலைகளை கடந்தால்தான், ஆன்மிகத்தின் மொத்த சாராம்சத்தையும் புரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு நாம் ஆன்மிகப்பாதையில் செல்லும் போது மற்றவரை வெறுப்பது, குடும்ப உறவை விடுவது, ஆசையை துறப்பது, அகந்தையை மறப்பது போன்ற பல்வேறு நிலைகளில் கடந் தாலும், சீர்கெடும் மக்களையும், நாட்டையும் நேர்வழிப்படுத்தவும் ஒருசிலர் முனைவார்கள், இப்படிப்பட்டவர்கள் ஆன்மீகத்தில் இருந்து கொண்டே அரசியல் அமைப்பையும் கட்டுப்படுத்து வார்கள், இந்த வழிமுறை அக்காலத்தில் மன்னர்கள் ஆட்சி நடைபெறும்போது மன்னர்கள் கடைபிடித்த வழிமுறையாகும்.

ஒவ்வொரு மன்னனும், தான் ஆளும் இடத்திற்கு ஏற்ப ஒரு முனிவரையோ அல்லது ஞானியையோ தனது நாட்டின் ஆஸ்தான குருவாக ஏற்றுக்கொள்வார்கள்.

இவர்கள் அனைத்து நேரத்திலும் அரசியலில் ஈடுபடமாட்டார்கள், தெய்வீக செயலில் ஈடுபட்டு வருவார்கள், மன்னனுக்கும், நாட்டுக்கும் ஏதேனும் ஆலோசனை தேவைப்பட்டாலோ, ராஜ்யத்தில் உள்ள மக்களுக்கு ஏதேனு பிரச்சனை வந்தாலோ தகுந்த ஆலோசனையை வழங்கும் மிகப்பெரிய பொறுப்பு இந்த ராஜகுருவாக விளங்கும் மகான் அல்லது ஞானிகளையே சேரும்.

இதனால் இவர்களை அரசியல் குரு என்றும் அழைப்பார்கள். இந்த வகையில் பாரதத்தில் பல அரசியல் குருக்கள் இருந்திருக்கின்றன. இவற்றை பல்வேறு புராணங்கள் இதிகாசங்கள் மூலமாக அறியலாம், சாணக்கியன், விதுரர், பீஷ்மர் போன்றோரை குறிப்பிட்டு கூறினாலும், இடைப்பட்ட காலத்தில் ஜெ.பி. என்ற ஜெயப் பிரகாஷ், விவேகானந்தர், அரவிந்தர், ரமணர் போன்றவர்கள் இந்த வகையில் பாரதத்தை வெளி உலகிற்கு தனது ஆன்மிக அரசியல் கருத்துக்களின் மூலம் வெளிக் கொண்டு வந்த வர்கள்தான்.

ஆன்மிகத்தை முழுவதும் அடைய வேண்டு மானால் சற்று நாட்டுப்பற்றும் தேவை, என்பதை உலகிற்கு உணர்த்தியவர்கள்தான் மேற்கண்டவர்கள்.

சாதாரணமாக வெளி மாவட்டத்திலேயோ அல்லது வெளிநாட்டில் உள்ள ஒரு கோவிலுக்கு செல்வதாக இருந்தாலும், அங்கு சென்று தங்கும் சொகுசு ஓட்டலுக்கு குறிப்பிட்ட தொகையை கொடுத்தால்தான் அங்கு நாம் சொகுசாக தங்கி எந்த அசௌகரியமின்றி இறைவனை வணங்கி சொந்த இடத்திற்கு வர முடியும்.

அதுபோன்றுதான் மனித உடலை தாங்கி, நமது கர்மாவை அனுபவித்து, இறைநிலையை அடைய, பூமி என்னும் சொகுசு ஓட்டலுக்கு வந்துள்ளோம். இங்கு தங்குவதற்கு பிரதிபலனாக உலகத்திற்கு காசுபணம் கொடுக்க தேவையில்லை, நாம் தங்கும் நாட்டிற்கு நம்மால் முடிந்த நன்மையை கடமையாக செய்யவேண்டும்.

இறை சிந்தனையோடு கூடிய நாட்டுப்பற்றை ஆன்மிக அரசியல் என அழைக்கலாம். இதை நாம் ஒரு குருவாகத்தான் இருந்து கடைபிடிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

தனி மனிதர்களாக இருந்து கொண்டே நம் நாட்டிற்கு நம்மால் இயன்றதை செய்ய முடியும், இறைவனை நினைத்து வழிபட்டுக் கொண்டே, நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் எந்தவித தீங்கும் நம்மால் ஏற்படாமலும், நம்மை ஆன்மிக அரசியலில் ஈடுபட்டுக் கொள்ளலாம்.

சரி எப்படி இதை சாத்தியப்படுத்துவது என்பதற்கு ஒரு சிறு சம்பவத்தையே அறிந்து கொள்ளலாம்.

ரஷ்ய முன்னாள் அதிபர் கோர்பச்சேவ் தனது சுயசரிதையில் அவரது கல்லூரி வாழ்வில் நடந்த சம்பவம் ஒன்றை குறிப்பிட்டு உள்ளார்.

அப்போது இரண்டாம் உலக போர் முடிவடைந்து இருந்த நேரம். ஜப்பான் முற்றிலும் சேதமடைந்து விட்டது. மேலும் அதன் மீது பொருளாதார தடை விதிக்க பட்டு இருந்தது.




அந்த சமயத்தில் நான் ஐரோப்பாவில் படித்து கொண்டு இருந்தேன். என்னுடன் இரண்டு ஜப்பான் மாணவர்களும் படித்தார்கள்.

அவர்களில் ஒருவன் பென்சில்களை சீவி கூர் செய்வான் அடுத்தவன் பாடம் எழுதுவான்.

ஏன் என்றால் ஜப்பானிய பென்சில்கள் அடிக்கடி உடைந்து போகும். தரமும் மிக குறைவு.

மற்ற மாணவர்கள் ஒருநாள் அந்தமாணவர் களிடம் ஏன் இந்த பென்சில்களை உபயோகிக் கின்றீர்கள். அதே விலைக்கு கிடைக்கும் இங்கி லாந்து பென்சில்களை உபயோக படுத்தலாமே. உங்கள் நேரம் வீணடிக்க படாது அல்லவா என்றனராம்.

அதற்கு அந்த மாணவர்கள் நாட்டுப்பற்றுடன் கூறினார்களாம்,

எங்களுடைய பென்சில்களை நாங்களே வாங்காவிட்டால் வேறு யார் வாங்குவார்கள்.

இன்று அதன் தரம் மற்ற பென்சில்களை விட மோசமாக இருக்கலாம். ஆனால் என்றாவது ஒருநாள் எங்கள் தயாரிப்புகள் உலக தரத்தை நிர்ணயிக்கும் என்றனராம்.

இதுதான் நாட்டுப்பற்று.

தன்னையும் தன் முன்னோரையும் வாழவைத்த நாட்டின் மீது மக்களுக்கு பற்று அவசியம் இருக்கவேண்டும்.

சாதாரணமாக நமது முன்னோர் வாழ்ந்த வீட்டை எவ்வளவு பொக்கிஷம் போல, எந்தவித சேதமும் ஏற்படாதவாறு பாதுகாப்பாக வைக்க நாம் ஆசைப்படுவோம்.

அதுபோன்றுதான் நம் முன்னோர் வாழ்ந்த நாட்டையும் மதித்து அந்த நாட்டிற்கு நம்மால் எந்த தீங்கும் வராமல் பாதுகாப்புடன் வைக்க, ஜப்பானியர்கள் போன்று பென்சில் உடைந்து போனாலும் பொறுமையாக அதையே பயன்படுத்தி நாட்டை வளச்சியடையவைத்தது போன்று, சில சிறு பிரச்சனைகள் நம்மை பாதித்தாலும் நாம் நாட்டு பற்றையும், மதப்பற்றையும் விடாமல் பாதுகாத்தாலே போதும் நாம் அனைவரும் தனிமனித ஆன்மிக அரசியலில் பங்கு பெற்றவர்களாக முடியும்.

இந்த நிலையில் இறை நம்பிக்கையும், வழிபாடும் சேர்ந்தால் இந்த உடல் பரிபூரண கடமையை இந்த பூமிக்கு செய்துவிட்டு இறை நிலைக்கு சென்றதாக இருக்கும்.

# இயற்கையை மறந்த மனிதன் எச்சரிக்கும் கொரானா கீரைகளால் சாதித்த க்யூபா



கொரோனா என்பது ஒரு உயிர், உயிர் என்பது தெய்வத்தால் மட்டும் படைக்கபடுவதால் அது சில நன்மைகளை அல்லது எச்சரிக்கைகளுக்காக மட்டுமே உலகில் அனுமதிக்கபடும்.

சரி இதை தெய்வம் அனுப்பியிருப்பது மக்க ளின் உயிரைப் பறிக்கவா?

சரியான கேள்விதான், ஆனாலும், இதை நிதானத்துடன் சிந்தித்துப் பாருங்கள் தெளிவான விளக்கம் கிடைக்கும்.

கொரானா யாரை அதிகம் தாக்குகிறது?

சுத்தம், சுகாதாரம், தனிமனித பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றாதவர்களையும்,நோய்நொடி யுள்ள உடலமைப்பைக் கொண்டவரையும், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களை மட்டுமே அதிகப்படியாக தாக்குகிறது கொரானா.

மேற்கண்டவை அனைத்தும் இயற்கையாக மனிதர்களுக்கு ஏற்பட்ட குறைபாடு கிடையாது. மனிதர்கள் தங்களை இயற்கையிடமிருந்து பிரித்துக் கொண்டதன் விளைவு.

- நாம் நம் முன்னோர் கடைபிடித்த வழிமுறை களை எப்போது கைவிட்டோமோ?
- இயற்கை தந்த உணவு வழிமுறைகளை எப்போது வெறுத்தோமோ?
- முன்னோர் கற்றுத்தந்த பண்பாட்டை என்று தவறவிட்டோமோ?
- முன்னோர் கடைபிடித்த சுகாதார முறை களை எப்போது அலட்சியப்படுத்த ஆரம்பித்தோமோ?

அன்றிலிருந்து கொரானா போன்ற கெட்ட கிருமிகள் மனிதர்களை ஆக்கிரமிப்பு செய்ய ஆரம்பித்துவிட்டது. இதுவரை பல்வேறு கிருமிகள் ஆக்கிரமிப்புகள் வெளியே தெரியாமல் நடைபெற்று வந்ததுதான் உண்மை.

ஆனால் தற்போது நம் முன்னோர் வாழ்க்கை







## Castro loved miracle plant from India

Former Prime Minister Atal Bihari Vajpayee called on then Cuban president Fidel Castro at Durban (South Africa) on September 2, 1998. PIB

What Fidel Castro loved most from India was 'moringa' or drumsticks, or 'nuggekai', as it is called in Kannada. In May 2015, when he had just recovered from a long illness, his first public meeting was a discussion on drumsticks.

He called the plant the "miracle" from India, and credited it for his recovery. He had got his aides to bring him drumstick seeds from Kerala and Tamil Nadu, and had them cultivated for his daily diet after being told they are good for stomach ailments.

In the last four years, a number of moringa trees have come up on Castro's residential compound on the outskirts of Havana.

After a long battle with a mysterious stomach ailment that was rumored to be cancer, his interest in moringa went up even further. In October 2012, the official Cuban news agency, Prensa Latina, quoted

முறையை நமக்கு வெளிப்படையாக எடுத்துக்கூற கொரானா என்னும் கிருமியை இயற்கையின் தூதுவனாக இறைவன் அனுப்பியிருக்கின்றான் என்றுதான் நாம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

பண்பாடு,மதம்,சமயம்போன்றவற்றையெல்லாம் அலட்சியப்படுத்தினோம், இயற்கை ஏதும் செய்யவில்லை, ஆனால் உடலுக்கு சக்தி தரும் உணவு முறைகளை மாற்றம் செய்தபோது இயற்கையால்கூட மனித இனத்தை காப்பாற்ற முடியவில்லை.

ஆனால் நாம் மறந்த விஷயத்தை க்யூபா என்ற சிறு நாடு மிக அழகாக கடைபிடித்து இன்று உலக அரங்கில் வெற்றி நடை போடுகிறது.

இதைப் பற்றி நமது வாசகர் கொடுத்த சிறு பதிவை ஆராய்வோம்...

1.5 கோடி மக்கள் தொகை கொண்ட கியூபாவில் கொரோனா 2 ஆயிரம் பேரை தாக்கியது வெறும் 84 பேரை தவிர இதர மக்கள் பிழைத்தார்கள், கொரோனா இல்லா நிலை நோக்கி கியூபா வேகமாக சென்று கொண்டிருக்கின்றது

ஆரம்பத்தில் கியூபாவில் மக்கள் நோயாளி மக்களாகவே இருந்தனர், போதிய நோய் எதிர்ப்பு சக்தி இல்லாமல் இருந்து வந்தனர், பெரும் பாலும் வயிற்றுப் போக்கு சம்பந்தமான நோயால் அவதிப்பட்ட மக்களுக்கு சரியான தீர்வை கண்டுபிடிக்க காஸ்ட்ரோ விரும்பினார்.

தனது விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் ஒரு மருத்துவ குழுவை அமைத்து நோய்க்கான காரணம் என்ன என்பதை ஆராய முற்பட்டார்.

இதில் மருத்துவக் குழுவின் அறிக்கையின்படி இயற்கை வைத்தியத்தில் இதற்கான தீர்வு உள்ளதாகவும், அதுவும் குறிப்பாக இந்தியாவில் விளையும் முருங்கைக் கீரையில் பல்வேறு சத்துக்கள் இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்திக்கு இது ஆதாரமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அன்றிலிருந்து க்யூபாவின் மருத்துவ முறை மாற்றப்பட்டது. அவர்கள் மருத்துவம் மேற்குலகம் சார்ந்ததல்ல கிழக்குலகம் மற்றும் மூலிகை சார்ந்ததாக மாற்றியமைக்கப்பட்டது.

க்யூபா முழுவதும் வேப்பமரங்கள் பெருமளவில் நடப்பட்டது.

காஸ்ட்ரோவுக்கு கொடுக்கபட்ட அறிக்கை யின்படி நோய் எதிர்ப்பு சக்திக்கு உகந்த முருங்கை மரத்து காயும் இலையும் இந்தியாவில் இருப்பதாகவும் சொல்லபட்டது.

இந்தியாவில் இருந்து குறிப்பாக தமிழக விதைகளை பெற ஏற்பாடு செய்யப்பட்டு கியூப குழு அவ்வகை முருங்கைகளை கியூபாவுக்குகொண்டு சென்றது, பெரும் பண்ணைகள் அமைக்கபட்டன, முருங்கை இலைகளை கொண்டு பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக தயார் செய்தும், காயவைத்து பொடிசெய்தும் மக்களின் பயன்பாட்டிற்கு கொடுக்கபட்டன

கியுப மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி அதி கரித்தது அதன் பின் பெரும் நோய்கள் இல்லை.

தற்போது க்யூபா மக்கள் இயற்கையுடன் ஒன்றி வாழ பழகிக் கொண்டதன் விளைவு கீரை, சுத்தமான சுகாதாரமான காய்கறி, பழங்கள் போன்றவற்றின் நுகர்வு பெருகியது, ஜங் புட், சத்தில்லாத சுவையான உணவுகளுக்கு அடிமையாகாமல் இன்றும் தங்கள் வாழ்க்கை முறையில் வாழ்கின்றனர்.

இப்பொழுது கொரோனா காலத்திலும் உலகத்தின் பார்வை க்யூபா மீது படும் அளவிற்கு, அவர்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொண்டதன் பலனை, இன்று அவர்கள் அறுவடை செய்கின்றனர்.

ஆம், கொரோனா என்பது நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதோரை மட்டும் குறிவைத்து தாக்கும் நோய். அறுவை சிகிச்சை, நீரிழிவு என





சிக்கிய நோயாளிகள் தின்னும் மாத்திரை கூடுதலாக ஆண்டிபயாட்டிக் இம்சைகள் அவர்கள் உடலை வலுவற்றதாக்குகின்றது.

இதனால் அவர்கள் எளிதில் மரணமடைகின்றார்கள் என்பதுதான் விஷயம், நோய் எதிர்ப்பு சக்தி என்பது பெருகியிருக்கும் உடலில் கொரோனாவால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

இறைவன் கருணையுள்ளவன் அவன் நோய் எதிர்ப்பு சக்தியினை முருங்கை என மிக எளிதான வகையில் தமிழகத்திலே வைத்திருக்கின்றான்.

ஆனால் நமது தமிழக மக்கள் அதை உண்ணாமல் காபி, டீ, கொக்க கோலா பரோட்டா என எதிலெல்லாமோ சிக்கி தன் ஆரோக்கியத்தை இழந்திருக்கின்றது

தமிழர்களும், இந்தியர்களும் கியூபாவிடம் இருந்து பாடம் கற்பது நல்லது.

ஆம், கியூபாவின் நோய் எதிர்ப்பு சக்திக்கு முக்கிய பங்காற்றும் முருங்கை கீரை மரங்கள் ஏராளம் இருந்தாலும் அதை பெரும்பாலும் யாரும் விரும்பி சாப்பிடுவது கிடையாது.

இன்னொரு விஷயமும் சொல்கின்றார்கள், நுரையீரல் பலமிழந்திருப்பவர்களை கொரோனா எளிதில் தாக்கும் அதற்கு மிகபெரும் நிவாரணம் அகத்தி கீரை.

ஆம் அகத்திகீரை நுரையீரலை வலிமையாக்கும். இந்த இரு கீரைகளும் இப்போதைக்கு அவசியமானவை.

நமது முன்னோர்கள் வாரத்தின் 7 நாளும் 7 வகை கீரைகளை நாளுக்கு ஒன்றாக சேர்த்தார்கள் என்கின்றது பழம் உணவு முறை.

அது உண்ணும் வரை ஆரோக்கியமாக இருந்தார்கள், பெரும் அணை கட்டவும் கல்தூண்களை அனாசயமாக சுமக்கவும் அவர்களுக்கு வலு இருந்தது.

இப்பொழுது கொரோனா காலம் எவ்வளவோ விஷயங்களை கற்று கொடுக்கின்றது, அது பழந்தமிழரின் மருத்துவ உணவாக இருந்த கீரைகளின் அவசியத்தை சொல்கின்றது.

இந்தியாவில் சர்வ சாதாரணமாக காணப்படும் விஷயம் முருங்கை கீரை அகத்தி கீரை. ஒரு நாள் விட்டு ஒருநாளாவது இதை உணவில் சேருங்கள், ருசிக்காக இல்லாமல் மருந்துக்காக சேருங்கள். கொரோனா நம் பக்கமே வராது.

நாக்குக்கு அடிமையாகி கண்டதையும் உண்ணாதீர்கள், குறிப்பாக முன்பே சமைத்த உணவினை உண்ணாதீர்கள், பேக் அயிட்டம் எனப்படும் உணவுகளை உண்டால் உடல் கெடும் என்பதே கொரோனா சொல்லும் செய்தி.

பேக் அயிட்டம் என்றால் அன்றாடம் சமைக்கா பொருள் என அர்த்தம், ஆம் அன்றாடம் சமைத்த உணவே ஆரோக்கியம் காக்கும் என்கின்றனர் தமிழக சித்தர்கள்.

இப்போது உலகம் சொல்லும் செய்தி நோய் எதிர்ப்பு சக்தி இருந்தால் கொரோனா தாக்காது, அந்த சக்தியினை கூட்டும் விஷயம் முருங்கையில் மிகுந்துள்ளது, அகத்தி கீரையில் வயிறு, நுரையீரல் பாதுகாக்கும் சத்துக்கள் உள்ளது.

இது போக அருகம்புல்சாறு ரத்தத்தை சுத்தமாக வைத்திருக்கும், ரத்தம் சுத்தமான உடலில் ஒரு நோயும் தாக்காது. இதனால்தான்

பிள்ளையாருக்கு அருகம்புல் மாலை சாற்றும் தத்துவம் இதுவே

நம் ஊர் சித்தர் பாடல்களையும், நம் கீரையின் மகத்துவத்தை நம்மை விட கியூபர்கள் படித்திருக்கின்றார்கள். இன்றுவரை போதை மருந்து இல்லா பூமி அது, கூடவே முருங்கையினை போற்றும் மண் அது கீரைகளை நிறைய சேருங்கள், முருங்கை யினை தவிர்க்காதீர்கள், உண்டபின் ஒரு துண்டு கசப்போடு அது வேப்பம்பூ துவையலோ இல்லை பாகற்காய் துண்டோ அதோடு உணவினை முடியுங்கள், ஒரு நோயும் அண்டாது.

ஆரோக்கியம் என்பது தமிழருக்கு அவர்கள் வீட்டின் முன்பும் பின்பும் வேப்பிலை மற்றும் முருங்கையாக நிற்கின்றது, அதுபோக கீரையாகவும் அருகம் புல்லாகவும் தரையில் கிடக்கின்றது. அதை கண்டெடுங்கள்.


• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்






ஆன்மிகமலர் மெயில் புக்
16-30 ஜூன் 2020 27
www.aanmeegamalar.com

# இராமாயணம் உண்மையா?

சமீப காலமாக ஆழிப்பேரலை என்பதைப் பற்றி மக்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த ஆழிப் பேரலையான சுனாமி என்பதின் தாக்கம் எத்தகைய கொடூரம் வாய்ந்ததாக இருக்கும் என்பதை நேருக்கு நேராக நாம் அனுபவித்தும் விட்டோம்.

இந்த சுனாமி புதிதாக நம்மை தாக்கவில்லை என்பதும் இதற்கு முன்னால் பல முறைகள் சுனாமி யின் கொடூர தாக்குதல் பூமியின் நிலப்பரப்பையே மாற்றியமைத்திருக்கிறது என்ற நிதர்சனத்தையும் நன்றாகவே உணர்ந்தும் விட்டோம்.

அப்படியொரு இயற்கைப்பேரழிவு இன்னொரு முறை நடந்ததாக எடுத்துக்கொள்வோம். அதனால் உலகம் முழுமையும் முற்றிலுமாக அழிந்துவிட்டது என்றே வைத்துக்கொள்வோம். மனிதன் நாகரீகத்துடன் வாழ்ந்தான் என்ற சுவடே இல்லையென்பதாக கற்பனை செய்து கொள்வோம்.

எந்த அழிவிலும் ஏதாவது ஒரு உயிர் தப்பித்து ஜீவத் தொடர்ச்சியை மேற்கொள்ளும் என்ற நியதியின் அடிப்படையில் ஏதோ ஒரு மனித ஜோடியின் மூலம் ஜனசமுத்திரம் ஒரு காலத்தில் உருவாவதாக எடுத்துக் கொள்வோம். அன்றைய காலத்தில் வாழும் ஒரு மனிதன் கையில் தற் கால சரித்திரத்தைக்கூறும் நூல் எப்படியோ தப்பி பிழைத்து அவன் கையில் கிடைப்பதாக கருதுவோம்.

அவன் அந்த நூலைப்படிக்கிறான். மனிதன் ராக்கெட் என்ற அதிவிரைவான வாகனத்தின் மூலம் சந்திரனுக்குச் சென்றான். கலிபோர்னியாவில் நடக்கும் கால் பந்தாட்டத்தைக் காஞ்சிபுரத்தில் வீட்டிற்குள்ளிருந்தபடியே தொலைக்காட்சியில் பார்த்தான். கெட்டுப்போன மனித இதயத்தை அகற்றிவிட்டு செயற்கை இதயம் பொருத்திக் கொண்டான் என்று எழுதி இருக்கும்

நாம் இப்போது அனுபவிக்கும் நவீன விஞ் ஞானப்பயன்பாடுகள் பற்றி அந்த புத்தகத்தில் கூறியிருப்பதை அந்த மனிதன் படித்தான் என்றால் அப்போது அவன் மனதில் எந்த மாதிரியான எண்ணங்கள் எழக்கூடும் என்பதை சிந்திக்க வேண்டும்.

நாகரீக வளர்ச்சியை தொட்டுப் பார்க்காத அந்த மனிதன் நிச்சயமாக அதை நம்பமாட்டான். தனது புலன்களாலோ, அறிவாலோ நுகராத எந்த விஷயத்தையும் எக்காலத்திலும் மனிதனால் நம்பமுடியாது.

வானத்திலிருக்கும் சந்திரனை போயாவது தொடுவதாவது. தூரத்திலிருப்பதை அப்படியே காட்டும் பெட்டி இருந்ததா. சுத்தபிதற்றல் அருவாளின் கைப்பிடியை மாற்றுவதுபோல் இதயத்தை மாற்ற முடியுமா? பொய்களை மட்டுமே நடக்க முடியாதவைகளை மட்டுமே எவனோ ஒரு பழைய பைத்தியம் எழுதி வைத்திருக்கிறான் என்று தானே கருதுவான்.

அழிவுக்கு பிறகு தோன்றுகின்ற வருங்கால மனிதனின் நிலையிலேயே இன்று நாம் இருக்கிறோம். மந்திரங்களால் யுத்தக் கருவி களை இயக்கச் செய்வதும் ஆணையிட்டு கடலை பிளக்க செய்வதும் வானரங்களையும், கரடிகளையும் போருக்கு பயன்படுத்தியதையும் இன்று நம்மால் நம்ப முடியவில்லை என்பதற்காக அவைகளெல்லாம் நடைபெறவே முடியாத சம்பவங்கள் என்று ஒதுக்கித்தள்ள முடியாது.

இந்தக் கால கணக்கு முறைகளை வைத்துக்கொண்டு ராமன் பனிரெண்டாயிரம் வருடங்கள் ஆட்சி செய்தான் என்பதை கணக்கு போட்டு மலைத்து போய் இது நடைபெறவே முடியாத சுத்தக் கற்பனை என்று ஒதுக்கத் துணிகிறோம்.

ஆனால் ஆதிகாலத்தில் ஒரு கணக்கு முறை இருந்தது. அதை வைத்துப் பார்க்கும் பொழுது பல்லாயிரம் ஆண்டுகள் ராமன் அரசாண்டு இருப்பான் என்பதை நம்ப வேண்டிய நிலை இருக்கிறது. வேதகால இந்தியர்கள் சமப்புள்ளிகளையும், நிலைப்புள்ளிகளையும் உறுதிபடுத்தி அவற்றை அக்னி, இந்திரன், மித்திரன், வருணன் இவர்களுடன் சேர்த்தனர்.

அதே போன்று சந்திரனின் வழியை 27 பிரிவுகளாக பிரித்து அவற்றை நட்சத்திரங்கள் என்றும் கருதினர். ஒரு பௌர்ணமியிலிருந்து இன்னொரு பௌர்ணமிக்கு உள்ள கால அவகாசத்தை ஒரு மாதமாகக்கொண்டனர்.

இவ்வாறு சந்திர சலனத்தைக் கொண்டு கணக்கிடும் கால அளவைகள் சூரியனின் இயக்கத்தை அடிப்படையாக எழும் கால அளவைகளோடு ஒத்திருக்க செய்தவற்கு 62 மாதங்களை ஐந்து வருடமாக கணக்கிட்டு இந்த ஐந்து வருடத்தை ஒரு யுகமாக குறிப்பிட்டனர். இதற்கான ஆதாரம் ரிக் வேதத்தில் இருக்கிறது. ஐந்து வருடத்தையே ஒரு யுகமாகச்சொல்லுகின்ற மரபு அக்காலத்தில் இருந்தது என்றால் பனிரெண்டாயிரம் வருடங்கள் என்பது இன்று நமக்குத்தெரியாத ஏதாவது ஒரு கணித முறை யில் கூறப்பட்ட வருடக் கணக்காக இருக்கலாம் அல்லவா.

இதுவரை நான் சொன்ன அகச் சான்றுகள் பற்றிய யூகங்கள் முற்றி லுமாக எனது






கருத்துக்கள் என்று நான் சொல்ல விரும்ப வில்லை.

பல அறிஞர்கள் இதே மாதிரியான அபிப் பிராயங்களை கொண்டுள்ளார்கள். அவற்றின் சாராம்சத்தைத்தான் நான் இங்கு கூறினேன். எனவே அகச் சான்றுகளின் ஆதாரமாக நம்பினால் ராமாயணம் என்பது கற்பனையல்ல நிதர்சனமான உண்மையென்பதும் நாம் வணங்கும் ஸ்ரீ ராமச்சந்திரன் கற்பனை கதாபாத்திரம் அல்ல. நாம் வாழும் இந்த பூமியில் நிஜமாகவே நடமாடிய தெய்வ மூர்த்திதான் என்பது தெளிவாகும்.

நடந்ததாகக்கூறப்படுகின்ற வரலாற்று நிகழ்வுகளுக்குகூட சரியான ஆதாரங்கள் இதுவரை அதிகமாக கிடைக்கவில்லை. கிடைத் திருக்கின்ற ஆதரங்கள் கூட வரலாற்றுச் சம்பவங்கள் நடந்ததா நடக்கவில்லையா என்பதை உறுதியாகக்கூறமுடியாத நிலையிலேயே உள்ளது.

உதாரணமாக சொல்வதென்றால் ஆரியர்கள் இந்தியாவில் வந்து குடியேறியவர்கள் என்று சில ஆதாரங்களை வைத்து பலர் கருதுகிறார்கள். அதே ஆதாரங்களைப்பயன்படுத்தி வேறு சிலர் ஆரியர்கள் இந்தியாவில் குடியேறவில்லை. அவர்களும் பூர்வகுடி மக்கள்தான் என்று சிலர் கருதுகிறார்கள்.

வாதங்கள் சந்தேகங்கள் என்று வந்து விட்டால் அவற்றைத்தீர்ப்பது என்பது முடியாத காரியமாகின்றது. ஒரு வகையில் முடிந்தால் இன்னொரு வகையில் சந்தேகங்கள் புதிதாகக் கிளம்பிக்கொண்டே இருக்கும். கடல் அலைகள் ஓய்ந்தால்தான் வாத அலைகள் ஓயும் என்றே சொல்லலாம். எனவே வாதங்களையும், சந்தேகங் களையும் ஒரு எல்லையோடு நிறுத்திக் கொள்வதே மனிதனை அமைதியான முறையில் வாழ அனுமதிப்பதாகும்.

எனவே ராமனும், ராமாயணமும் பொய் என்பதற்கு சந்தேகத்திற்கே இடம் இல்லாத வகையில் ஆதாரம் என்று கிடைக்கிறதோ அதுவரை நாம் அதை உண்மையென்று நம்புவதை யாரும் தடுக்க முடியாது. பொய்யென்று கூறுவதற்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை மெய்யென்று நம்புவதற்கு உண்டுயென்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



# கோவில்களின் சொத்துக்களை எளிமையாக அறிந்துகொள்ள

கோயில்களை கட்டிய முன்னோர்கள் அந்த கோயில் பராமரிக்கவும் அசையும் சொத்துக்கள் அசையா சொத்துக்கள் என பல்வேறு வகையான சொத் துக்களை கோயில்களுக்கு எழுதி வைத்தனர்.

இது காலப்போக்கில் ஒருசில சுயநலவாதி களால் கொள்ளையடிக்கப்படும் என்பதை முன் கூட்டியே உணர்ந்து, அனைவரும் பொதுவாக கோயிலின் சொத்து எவ்வளவு என்பதை அறிந்து கொள்ள ஒரு சிறப்பு ஏற்பாடு செய்துள்ளனர்.

கோயில்களில் இதுபோன்ற நீளமான கோடு (படத்தில் வட்டமிட்டு காட்டப்பட்டுள்ளது) காணப் பட்டால் இதை சாதாரணமாக கடந்து சென்று விடாதீர்கள். அதற்கு பின் இவ்வளவு விசயம் உள்ளது. (எல்லா கோடுகளையும் கணக்கில் கொள்ள வேண்டாம் சில நேரங்களில் அது அழகுக்காகவும் போடப்பட்டிருக்கலாம்) தொடங்கும் இடத்திலும் முடியும் இடத்திலும் குறுக்கே படத்தில் இருப்பதைப் போல் ஒரு கோடு இருக்கும்.

இது நில அளவைக்காக ஆயிரம் வருடங் களுக்கு முன்பு சோழர்களால் பயன்படுத்தப்பட்ட அளவைக் கோல். அதாவது ஒவ்வொரு கோயிலுக்கும் நிலங்கள் தானமாக அன்றைக்கு அளிக்கப்பட்டது. அப்படி தானமளிக்கப்பட்டது எத்தனை குழி, அந்த நிலம் ஊரில் எந்த இடத்தில் இருக்கிறது என்பதும் தெளிவாக கல்வெட்டில் குறிக்கப்படும்.




வடக்கு, தெற்கு என நான்கு திசைகளும் குறிக்கப்பட்டு இந்த திசையில் இந்த இடத்தோடு முடிவடைகிறது என்று அருகில் இருக்கும் ஒரு அடையாளமும் தெரிவிக்கப்பட்டிருக்கும். கோயில் சுவற்றில் இருக்கும் இந்த கோலின் அளவைக் கொண்டு தான் நிலத்தை அளந்தோம் என்பதை மக்களுக்கு தெரிவிப்பதற்கும், நாளை கோயில் நிலத்தில் ஏதேனும் சிக்கல் வந்தால் மீண்டும் இந்த பொறிக்கப்பட்டுள்ள கோலின் அளவைக் கொண்டு கணக்கிடலாம் என்பதற்கும் அதை கோயில் சுவற்றில் நிரந்தரமாக பதித்தனர்.

இந்த கோல் ஒவ்வொரு மன்னர் காலத்திலும் ஒவ்வொரு பெயரில் அழைக்கப்பட்டது. இது முன்னரே பழக்கத்தில் இருந்தாலும். இராஜராஜன் தான் முதல் முதலாக சோழ நாடு முழுவதையும் நஞ்சையும், புஞ்சையும் தனித்தனியாக அளந்தான்.

சோழநாட்டின் நிலம் அனைத்தையும் துல்லியமாக அளக்கவும், அவற்றின் தரத்தை நிர்ணயிக்கவும் குரவன் உலகளந்தான் இராசராச மாராயன் என்பவன் தலைமையில் இராசராச சோழன் ஒரு குழு அமைத்தான்.

இக்குழு தனது பணியைக் சிறப்பாக செய்து முடித்துள்ளது. இதனால் இராஜராஜன் "உலகளந்தான்" என்ற பட்டமும் பெற்றான். அப்படி அவன் காலத்தில் அளக்கப்பட்ட கோலிற்கு பெயர் "உலகளந்தான் கோல்" என்பதாகும்.

அது பதினாறு சாண் நீளமுடையதாக இருந்துள்ளது. எந்தவித சாதனங்களும் கண்டறி யாத அந்த காலத்திலேயே நிலத்தை அளந்து தரம் பிரிப்பதென்பது ஒரு மாபெரும் பணி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு அரசு எப்படியெல்லாம் சிறப்பாக இயங்கியுள்ளது என்பதற்கு இதுவெல்லாம் நமக்கு கிடைக்கும் சாட்சி !

இன்று பல கோவில்களில் இந்த கோடுகளை திட்டமிட்டு அழிக்கும் நோக்கத்தில் சிமெண்ட் கலவை, டைல்ஸ் கற்கள் மூலம் மறைத்து விடுகின்றனர். மேலும் இந்த கோடு பற்றி அவ்வளவாக தெரிமலும் இந்த கோடுகளை மறைக்கும் விதத்தில் கட்டுமானம் பெருகிவிட்டது.

நன்றி: திரு.ஹரிஹரன்

# ஸாதனை சம்பந்தமான சந்தேக விளக்கங்கள்

ஆன்மீகத்தின் சித்தாந்த பகுதியை எவ்வளவு பயிற்சி செய்தாலும் மனதிலுள்ள சந்தேகங்கள் நீங்காது என்பதால் ஸாதனை சரியானபடி நடப்பதில்லை. இந்த கண்ணோட்டத்தில் உலகெங்கும் உள்ள ஆன்மீக ஆர்வலர்கள் மற்றும் ஸாதகர்களின் மனங்களில் சர்வ சாதாரணமாக உண்டாகும் ஆன்மீக சாஸ்திரத்தின் சித்தாந்தம் மற்றும் செயல்பாடு சம்பந்தமான சந்தேகங்களுக்கு ஸனாதனின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் பராத்பர குரு டாக்டர் ஆடவலே அவர்கள் விளக்கங்களை அளித்துள்ளார். ‘சந்தேக விளக்கங்கள்’ என்ற இந்த தொடர் மூலமாக கேள்வி பதில் வடிவில் வாசகர்களுக்கு இதை வழங்குகிறோம். இதைப் படித்து புரிந்து கொண்டு அதிக அளவு ஆன்மீக ஆர்வலர்கள் சரியான ஸாதனை வழியை ஆரம்பிக்க வேண்டும் மற்றும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஸ்ரீகிருஷ்ணனின் சரணங்களில் பிரார்த்தனை செய்யப்படுகிறது!

ஆன்மீகத்தின் தத்துவ பகுதி வெறும் 2% முக்கியத்துவம் வாய்ந்தது, செயல்பாட்டு பகுதி 98% முக்கியத்துவம் வாய்ந்தது. ஸாதனை செய்யும்போது ஏற்படும் பல்வேறு தடங்கல்களை எவ்வாறு களைவது, ஸாதனை கண்ணோட்டம், ஸாதனையில் ஏற்படும் லௌகீக தடங்கல்களை எவ்வாறு களைவது ஆகியவற்றைப் பற்றி செயல்முறை விளக்கங்களுடன் பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன.

அ. ஸாதனை செயல்பாடு

கேள்வி : வியாபாரத்தில் மிக முக்கியமான ஒரு வேலை கண்முன் நிற்கிறது, அதை செய்து முடித்தாக வேண்டும் என்ற சூழ்நிலை. அச்சமயத்தில் வியாபாரத்தை மறந்து சேவைக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பது எந்த அளவு சரியானது?

பதில் : யாருக்கு வியாபாரம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக தோன்றுகிறதோ மற்றும் மனதில் விகல்பம் எழும் வாய்ப்பு உள்ளதோ அவர்கள் வியாபாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஏதாவது ஒரு விஷயம் புத்தியில் சரி எனப் பட்டால் அதை உடனே செயல்படுத்த வேண்டும்.

ஸனாதன் ஸன்ஸ்தாவின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் ஸந்த் பக்தராஜ் மகாராஜ் அவர்களின் உத்தராதிகாரியான பரம் பூஜ்ய ராமானந்த மகாராஜிடம் அவர் குரு ‘ராம்ஜி என்னுடன் வா’ என்றால் உடனே அவர் சென்று விடுவார். மனைவி என்ன சொல்வாள் என்ற கவலை சிறிதும் அவருக்கு இல்லை. ஸந்த் பக்தராஜ் மகாராஜ் அவர்களின் பத்தினி (ஜிஜி) மற்றும் ராமானந்த் மகாராஜ் அவர்களின் பத்தினி (அக்கா) ஆகிய இருவரும் ஒரு விதத்தில் வனவாசத்தைத் தான் அனுபவித்தனர். அவர்கள் இருவரின் கணவன்மாரும் நாற்பது வருடங்கள் சுற்றிக் கொண்டே இருந்தனர். கிராமம் கிராமமாக சென்றனர், அச்சமயத்தில் அவர்களின் மனைவிகள் வீட்டிலேயே இருந்தனர். மனைவி வீட்டில் தனியாக இருக்கின்றாளே என்று கவலைப்பட்டார்கள் என்றால் இல்லை. அதனால் அவர்கள் ‘மகாராஜ்’ ஆனார்கள்.

ராம்ஜி தாதாவின் இன்னொரு உதாரணம்



என்னவென்றால் அவரால் அலுவலகத்திற்கு அடுத்து சில மாதங்கள் செல்ல முடியாமல் இருந்தது. மகாராஜ் அவரை ‘வா’ என்று அழைத்தால் உடனே சென்று விடுவார்! ஒரு மாதத்திற்குப் பின்னர் யாத்திரையை முடித்து திரும்பியபோது அவருக்கு இந்த மாதம் சம்பளம் எதுவும் கிடைக்காது என்பது தெரிந்தது. யாரிடமாவது கடன் வாங்க வேண்டும் என நினைத்தார். ஆனால் அலுவலகத்திற்கு சென்ற பின் அதிகாரி கூறினார், ‘அடடா, நீங்கள் சம்பளம் வாங்க மறந்து விட்டீர்களே’. அதாவது அவர் இல்லாத சமயத்தில் இன்னொரு ‘ராம்ஜி தாதா’வை குருவானவர் நிர்மாணித்துள்ளார். அவரே இவரின் அனைத்து வேலைகளையும் செய்தவர். இது எப்பொழுதோ பூர்வ காலத்தில் மட்டுமே நடக்கும் என்பது இல்லை, இப்போழுதும் நடந்துள்ளது. அதற்கு அந்த அளவு ச்ரத்தை தேவை, குரு ஆணையை சிரமேற்கொள்ளும் மன உறுதி தேவை.

யார் என்னுடைய வியாபாரம், வீட்டு காரியம், என்னுடைய கடமை என்று செய்து கொண்டிருக்கின்றனரோ, அவர்கள் பெரும்பாலும் ஆயுள் முழுவதும் அதே நிலையில் தேங்கி விடுகின்றனர். ‘இது எல்லாம் மாயை. இதிலிருந்து நான் விடுபட வேண்டும். அதுவே ஏன் ஜீவனின் தலையாய கடமை’, என்பதை உணர வேண்டும். பரமேச்வரனை அடைய வேண்டும் என்ற தீவிர இச்சை யாரிடம் உள்ளதோ அவரே இதிலிருந்து விடுபட இயலும். இல்லையென்றால் அந்நிலையிலேயே மாட்டிக் கொள்வர்.

நான் சிப்ளூனில் இருந்து சிந்துதுர்க் நோக்கி செல்ல வேண்டி இருந்தது. அருகில் இருந்த சில ஸாதகர்களை சாதாரணமாகக் கேட்டேன், அவர்களும் என்னுடன் வருகிறார்களா என்று. அவர்கள் கூறினார்கள், ‘வரலாம்ஞ்ஆனால்ஞ்’ அவ்வளவுதான்! ‘ஆனால்’ வந்துவிட்டால் எல்லாம் குழப்பம்தான். ‘ஆனால்’, ‘இருந்தாலும்’ ஆகியவை செல்லாது.

ஜீவனை சிறிதும் வருத்தாமல் எதுவும் சாத்தியமாகாது. இதற்கு மாறாக ஆலோயாவின் இரு ஸாதகர்கள் உடன் வந்தனர். அவர்களிடம் ‘வருகிறீர்களா’ என்றதும் ‘ஆம், வருகிறோம்’ என்றனர். நான் கேட்டேன், ‘உங்களின் துணிமணிகள்?’ அதற்கு அவர்கள், ‘ஒன்றும் இல்லை, அப்படியே வருகிறோம்’ என்றனர். அதாவது நான்கு நாட்கள் சிந்துதுர்க்ல் இருக்க வேண்டுமென்றால் குளிப்பதற்கு துண்டு, உள்ளாடைகள் வேண்டுமே? துண்டு வேண்டுமென்றால் அங்கு கிடைக்கும்; ஆனால் அணிவதற்கு ஆடைகள், உள்ளாடைகள் வேண்டுமே, அது கூட இல்லையே! அதாவது யாருக்கு இவ்வாறிருக்க முடியுமோ அவர்களாலேயே எதையும் சாதிக்க முடியும்.

கேள்வி : ஸாதனை எவ்வாறு நடக்க வேண்டுமோ அவ்வாறு நடப்பதில்லை. ஏதாவது தடங்கல்கள் ஏற்பட்டு நடுவில் நின்று போகிறது.

பதில் : ஆரம்பத்தில் உடலளவில் தடங்கல்கள் ஏற்படுகின்றன. ஒரு இடத்தில் உட்காரும் பழக்கம் உங்களிடம் இல்லை. நாமத்தை எடுத்துக் கொண்ட பின்பு உடலில் அரிப்பு, கழுத்து வலி, முதுகு வலி எல்லாம் ஏற்படுகின்றன. நீங்கள் ஸாதனை செய்ய ஆரம்பிக்கும்போது இவ்வாறான தடங்கல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். அதையும் மீறி செயல்படுவதற்கான உறுதி உங்களிடம் வேண்டும். சாய்பாபா அவர்கள் கூறியுள்ளார், ‘ச்ரத்தை மற்றும் பொறுமை’. ஸாதனையில் தொடர் முயற்சி அவசியம்.

கேள்வி : குரு ஆணையின் உள்ளர்த்தத்தை புரிந்து கொள்வதற்கு வெகு காலம் பிடிக்கிறது. சில சமயம் எல்லாம் முடிந்த பின்னரே புரிய ஆரம்பிக்கிறது. இதற்கான உபாயம் என்ன?

பதில் : ஆரம்பத்தில் குரு என்ன சொல்கிறார் என்பது உங்களுக்கு விளங்குவது இல்லை. அவர் சாதாரணமாக பேசுவதன் உள்ளர்த்தம் உங்களுக்கு புரிவது இல்லை. அது புரிய வேண்டும் என்பதற்காக ஸனாதன் ஸன்ஸ்தா ‘பாபாவின் உபதேசம்’ என்ற நூலை வெளியிட்டு உள்ளது. அதில் குரு ஆணையின் நூற்றுக்கணக்கான உதாரணங்கள் தரப்பட்டுள்ளன. பாபாவின் பஜனை நூலிலும் (ஸந்த் பக்தராஜ் மகாராஜ்) பஜனை பாடல்களின் உள்ளர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த இரு நூல்களை பயின்றால் மகான்களின் மொழி எவ்வாறு உள்ளது அதன் உண்மையான உள்ளர்த்தம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். ஒரு மகானின் வார்த்தையை புரிந்து கொண்டு விட்டால் எல்லா மகான்களையும் புரிந்து கொள்ள முடியும்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.
தொடர்பு கொள்ளவும்
08825844033



# உயிர்ப்பான வாழ்க்கை வலிமையானது

நேரத்தை கணக்கிட்டுக் காட்டுகின்ற குறிப்பே மலருகின்ற மலர். ஒவ்வொரு மனிதனின் நிமிட வளர்ச்சி என்பது அவர்களின் இளமைக்காலமே. இதை ஒருபோதும் தவற விடாதீர்கள்.

❖❖❖

சிந்தனை செய்யும்பொழுது காலம் கூட ஒரு மலருகின்ற மலரின் மலர்ச்சியைப் போன்றதே. இதைக்கொண்டு புத்தி வளர்ந்து விட்டது என்று சொல்லலாம். உலகநாடுகளின் இளைஞர்கள் உட்பட முதியோர்களின் புத்தி, அறிவு இவைகளின் வளர்ச்சி மதிப்பீடு மலர்களைப் போன்றதே, இத்தன்மை கடவுளின் ஆசிர்வாதத்தோடு ஏற்படுகின்றது.



❖❖❖

வளருகின்ற ஒரு அற்புத செடி அது பூக்கின்ற நேரத்தில் தான் பூக்க வேண்டும் என்பதற்காக மட்டும் பூக்கவில்லை. மலர்ச்சி என்னும் செய்முறை எனது வருங்கால வித்து என்னும் விதையைத் தோற்றுவிக்கவே அது அப்படி செய்கிறது. இத்தகைய மலர்களை நோக்கு. அதுவே உனது உண்மையான பரிசோதனை.

❖❖❖

இந்தியர்களை அழைத்து பேசும்போது அல்லது அந்த நாட்டைக் குறிப்பிடும்போதும் இந்தியாவின் மலர்களே என்றுதான் சிந்தித்துக் கொண்டிருக்கின்றவர்கள் கூப்பிடுகிறார்கள். இந்திய மக்களான மலர்கள் எப்பொழுதுமே வாய்நிறைய புன்முறுவலைக் கொட்டுகிறவர்களாக இருக்கிறார்கள். இப்படி செய்வது அவர்களுடைய அனுபவம் அல்ல. இது அவர்களின் ஆன்மவளர்ச்சியே.

❖❖❖

நீ இவ்வுலகில் வளர்ந்து விட்ட ஒரு ஆணா அல்லது ஒரு பெண்ணா? தயவு செய்து உனது மலர் போன்ற திறமைகளை மலரச் செய்து காட்டு. இப்படி செய்வாயேயானால்

உனது உள்ளத்தில் இருக்கின்ற வித்தின் எண்ண முடிவு ஒரு வடிவத்தை வெளிக் காட்டி விடும். அப்பொழுதுதான் உன்னுடைய இயற்கையான தொழிற்பாடு என்ற வித்து தானாகவே வெளிவந்து வெற்றியைத் தரும்.

❖❖❖

பேரறிவு கொண்ட உலகப்பெருமக்களே! நீங்கள் அனைவரும் நேற்றைய சமுதாயத்தின் வித்துக்கள். நீங்கள் இன்றைய மலர்கள், நாளையோ நீங்கள் உலகத்தின் வித்துக்கள்.

❖❖❖

அன்பனே எத்தகைய வித்து உனது உள்ளத்தில் இருக்கிறது? அது எத்தகைய வித்தாக இருந்தாலும் நீ சரியாக வளருகின்ற ஒரு செடி என்று நினைத்துக் கொள். இத்தகைய மனிதர்களே இப்பொழுது உலகில் நடமாடித் திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

❖❖❖

சக்தியற்ற ஒரு வாழ்க்கை உலகில் பாழாய்போன ஒரு வாழ்க்கையாகும். சக்தியுள்ள ஒரு உயிர்ப்பான வாழ்க்கை ஒரு பாறாங்கல்லை விட மிகவும் வலிமையானது.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

● ஆன்மீகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# ராஜமாதங்கி

லோக மாதா ஸ்ரீ ராஜமாதங்கி என்னும் ஸ்ரீ ஷ்யாமளா தேவி ஸ்ரீ வித்யா உபாஸனையில் பிரதானமாக விளங்குபவள். ஞானம், வித்தை மற்றும் கலைகளின் அதிபதி. கேட்போருக்கு கேட்டவற்றை அள்ளி தரும் கற்பக வ்ருக்ஷம்.

ஸ்ரீ லலிதாம்பிகையின் வாசஸ்தலமாகிய ஸ்ரீ நகரத்தில், பலவிதமான கோட்டைகள் அமைந்துள்ளன. அவற்றுள், தங்க, வெள்ளிக் கோட்டைகளுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் உள்ள கதம்பவனத்தில், ஸ்ரீ சக்ரத்தில், இந்த இடம், த்ரிகோணம், பஞ்சகோணம், அஷ்டதளபத்மம், ஷோடச தள பத்மம், உள் பத்து கோணம், வெளிப்பத்து கோணம், சதுரம் என்ற ஏழு ஆவரணச் சக்கரங்கள் கூடும் இடமாக உள்ளது) தங்கத்தினாலான படிகள் உள்ள, மாணிக்கத்தால் ஆன மண்டபங்கள் உள்ள விசாலமான ஆலயத்தில், ரத்தினம் இழைத்த அழகான சிம்மாசனத்தில், ப்ரஹ்ம வித்தையின் 98 அக்ஷரங்களின் அதிபதியாக விளங்கும் ஸ்ரீ சியாமளா தேவி வீற்றிருந்தருளுகிறாள்.

கஸ்தூரி திலகம் அணிந்து, மூன்று கண்களுடனும், தாம்பூலத்தால் சிவந்த திருவாயில் தவழும் புன்சிரிப்புடனும், சந்திரகலை சிரசில் மின்ன, கதம்ப மாலை துளசி மாலை முதலியன அணிந்து, கிளி, தாமரை மலர் முதலியவற்றைத் தாங்கிய திருக்கரங்களுடன், வீணா கானம் செய்து கொண்டு, சிருங்கார ரஸம் ததும்பும் கருணா கடாக்ஷத்துடன், 'ஸங்கீத மாத்ருகை' எனப் போற்றப்படும் மந்திரிணீ தேவியாகிய ராஜ மாதங்கி தேவி தன்னைத் தொழுவோருக்கு அருள் மழை பொழிந்து கொண்டிருக்கிறாள்.

நம் உடலில் அமைந்துள்ள ஆதாரச்சக்கரங்களில், தொண்டைப் பகுதியில் அமைந்துள்ள 'விசுத்தி' சக்கரத்தில் பேச்சுக்கு அதிபதியான இந்த அம்பிகை கொலுவீற்றிருக்கிறாள்.

மந்திர சாஸ்திர உபாசனையில் மேலான இடம் வகிக்கும் ஸ்ரீ வித்யா உபாசனையில் முதலில் ஸ்ரீ மஹா கணபதி மந்திரம், ஸ்ரீ பாலா திரிபுர சுந்தரி மந்திரம், பின்னர் ஸ்ரீ ராஜமாதங்கி மந்திரம் உபதேசிக்கப்படும் அதன் பிறகே ஸ்ரீ வாராஹி மந்திரம் உபதேசம் செய்யப்படும். மாதங்கியின் மந்திரம், 98 எழுத்துக்கள் கொண்டதாகும். மாதங்கி மந்திரம் ஒருவருக்கு சித்தியாகிவிட்டால் உலகில் உள்ள மற்ற வேத மந்திரங்கள் உட்பட அனைத்துமே ஒரு முறை படிப்பதாலேயே சித்தியாகும் என மதங்கமனுகோசம் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சியாமளா தேவியின் ஆலோசனை பெற்றே பரமேஸ்வரி எதையும் செய்வாள். அம்பிகையின் வலப்புறம் வீற்றிருக்கும் பெருமை கொண்டவள் சியாமளா தேவி. மன இருளையகற்றி ஞான ஒளியைத் தருபவள் இவள். கதம்பவனவாஸினீ" என்றும் இந்த அம்பிகை துதிக்கப்படுகிறாள்.

லலிதா திரிபுரசுந்தரி வாசம் புரிந்தருளும் ஸ்ரீநகர ஸாம்ராஜ்யத்தை நிர்வகிக்கும் பொறுப்பு இந்த மாதங்கியுடையதே. மந்திரியின் தயவு இருந்தால் ராஜாவின் அன்புக்குப் பாத்திரமாவதைப் போல மாதங்கியின் தயவை நாடியவன், லலிதையின் அருளை அடைவான் என்கிறது தந்த்ர சாஸ்திரம். இவளால் செயல்படுத்த முடியாதது என்று எதுவுமே இல்லை.

இவளை அனாஹத சக்கரம் என்ற ஹ்ருதய ஸ்தானத்தில் தியானிக்க வேண்டும். இவளது அங்க தேவதை லகுஷ்யாமளா, உபாங்க தேவதை வாக்வாதினி, பிரத்யங்க தேவதை நகுலீ. இவர்கள் சாதகனுக்கு நல்ல வாக்குவன்மை, கலைகளில் தேர்ச்சி, சங்கீத ஞானம், சகலகலா பாண்டித்தியம் அருள்வார்கள்.

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

`ராஜ ஷ்யாமளா' என்று ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் இவளைக் கொண்டாடுகிறது. சாக்த வழிபாட்டில் சப்த மாதாக்களில் ஒருவராகவும் (சாக்த வழிபாட்டில் பிராம்மி, மாகேஸ்வரி, கௌமாரி, இந்த்ராணி, சாமுண்டி, வாராஹி, சியாமளா ஆகியோரை சப்த மாதர் என்பர்), தசமகா வித்யாக்களில் ஒன்பதாவது தேவியாகவும் ராஜ மாதங்கி இருந்துவருகிறாள்.

மதுரை மீனாக்ஷி ஸ்ரீ ராஜமாதங்கி அம்சம். மதுரை மீனாக்ஷியே மந்த்ரிணி ரூபம் என்பதால் மீனாஷியே மாதங்கி ஸ்வருபம் என்றும், தச மஹா வித்தையில் வருபவள் மீனாக்ஷியே என்பர். நீலம் கலந்த பச்சை நிறத்தில் காட்சி தரும் தேவி சகல செல்வங்களையும் அருளக் கூடியவள். என்றும் உயர்நிலையில் இருப்பவள். அனைத்து கேடுகளையும் தனதாக்கி நன்மையை பிறருக்கு அருள்பவள். ஸ்ரீபுரத்திலுள்ள கடம்பவனத்துள் உலவுபவள் சியாமளா தேவி. பூவுலகில் கடம்பவனம் என்று போற்றப்படும் மதுரையில், பாண்டிய மன்னன் காஞ்சனமாலை ஆகியோரின் வேண்டுதலை ஏற்று அக்னி குண்டத்தில் உதித்தாள் என்பர். மதுரை மீனாட்சி கோவிலில் சியாமளா சக்கரம் பதிக்கப்பட்டுள்ளதாம்.

காளீ, தாரா, ஷோடசீத்ரிபுரஸுந்தரி, புவனேச்வரீ ராஜராஜேஸ்வரீ, ச்சின்னமஸ்தா, பைரவீ, தூமாவதீ, பகலாமுகீ, மாதங்கீ, கமலா (லக்ஷ்மி) ஆகியோர். தச மஹா வித்யையில் ஒன்பதாவது ஸ்வருபமாக வருபவள் ஸ்ரீ ராஜமாதங்கி.

ஒரு பிரளய காலத்தில், பிரம்மதேவன் யானை வடிவில் சிவபெருமானைக் குறித்து தியானம் செய்துகொண்டிருந்தார்.

அப்போது பிரம்மனின் மனதிலிருந்து ஒரு மகன் தோன்றினார். அவரே மதங்கர். (மதங்கம் என்றால் யானை.) பிரம்மன் மதங்கரிடம் "தவம் செய்'' என்று கூற, அது பிரளய காலமாதலால் எங்கும் வெள்ளம் சூழ்ந்திருந்தது. அப்போது அங்கு வந்த நாரதர், "பிரளய காலத்திலும் அழியாத இடம் திருவெண்காடு. எனவே அங்கு சென்று தவம் செய்'' என்று கூறினார்.

அதன்படியே திருவெண்காடு சென்று தவம் மேற்கொள்ள, மதங்கரின் தவத்தைக் கலைக்க மன்மதன் வந்தான். அவனை, "சிவனாரது நெற்றிக்கண் சுடரால் எரிவாய்'' என சபித்தார் மதங்கர். அடுத்து மகாவிஷ்ணுவானவர் மோகினி வடிவில் வர, "திருவெண்காட்டில் மோகினி வடிவுடனேயே இருப்பீர்'' என்றார். மதங்கரின் தவத்தில் மகிழ்ந்து அவர்முன் தோன்றிய விநாயகர், அஷ்டசித்திகளையும் மதங்கருக்கு வழங்கினார். இறுதியில் சிவபெருமானும் தரிசனம் தந்தருளினார்.

ஸ்ரீ மதங்க முனிவர் (ராமாயண காலத்தில், ராமரின் வரவுக்காகக் காத்திருந்த சபரியின் குருநாதர் இவரே.) மதங்க முனிவரின் தந்தை தேவி உபாசகர். மதங்கருக்கு இமவான் நண்பன். இமவான் தவம் செய்து பார்வதி தேவியையே மகளாகப் பெற்றான் அல்லவா? அந்த நினைவு மதங்கருக்கு வரவே, கடும் தவம் மேற்கொண்டு அன்னையின் அருள் தரிசனத்தைப் பெற்றார்.

அக்ஷர லக்ஷம் ஜெபம் செய்து ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் தரிசனம் பெற்று அவளையே தன் மகளாக பிறக்க வேண்டும் என்று வரம் பெற்றார். அதன் பயனாக ஸ்ரீ ராஜமாதங்கி மதங்கர் சித்திமதி தம்பதிக்குத் திருமகளாக அதிகாலையில், மதங்க தீர்த்தத்தில் முகிழ்த்த நீலோத்பல மலரில் ஆடி மாதம் வெள்ளிக்கிழமை அன்று சியாமளா அம்சமாக உதித்தாள் அம்பிகை. அந்தக் குழந்தையை மதங்கர் அன்புடன் வளர்த்தார் என்கிறது திருவெண்காடு தலபுராணம். (திருவெண்காட்டிலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் மதங்காஸ்ரமம் உள்ளது.)

அவளுடன் பல தேவகன்னியர் மதங்க கன்னி கைகள் என உதித்தனர். அனைவரும் கடம்ப மரங்கள் நிறைந்த வனத்தில் வீணை மீட்டி இன்புற்றிருந்தனர். அதனால் 'மாதங்கி' என்று அழைக்கப்படுகிறாள். ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் கரத்தில் உள்ள கரும்பு வில்லில் இருந்து உண்டானவள். ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி எனும் பராசக்தியின் மந்திரியாய் விளங்குகிறாள். அவளின் ராஜ்ய பாரம் முழுதும் கவனிப்பவள். சங்கீதத்திற்கு இவளே அதிபதி (அதிஷ்டான தேவதை).

மாதங்கியின் பதினாறு பெயர்கள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. அவை சங்கீத யோகினி, சியாமா, சியாமளா, மந்த்ர நாபிகா, மந்த்ரிணி, சசிவேசானி, ப்ரதானேசி, சுகப் பிரியா, வீணாவதி, வைணிகி, முத்ரிணி, பிரிய கப்பிரியா, நீபப்பிரியா, கதம்பேசி, கதம்பவனவாசினி, சதாமாதா ஆகியவையாகும்.

மாதங்கி தேவி எட்டு கைகளை உடையவள். ஒரு கையிலுள்ள சம்பா கதிர் உலகியல் இன்பங்களையும்; மற்றொரு கரத்திலுள்ள தாமரை மலர் கலை உள்ளத்தையும்; இன்னொரு கரத்திலுள்ள பாசம் ஈர்ப்பு சக்தியையும்; வேறொரு கரத்திலுள்ள அங்குசம் அடக்கியாளும் திறனையும்; காரிகை உலகியல் ஞானத்தையும்; கிளி ஆத்ம ஞானத்தையும்; இரு கைகளில் ஏந்திய வீணை சங்கீத ரசனையையும் அருளுகின்றன.

வீணை, கிளி, புத்தகம், தாமரை மலர் ஏந்தி, எட்டுக் கரங்களுடன் அமர்ந்த கோலத்திலுள்ள சியாமளா தேவியை, காஞ்சி காமாட்சி கோவில் பிராகாரத்தில் காணலாம்.

ராஜ மாதங்கி உபாசனையில் பிரதானமாக விளங்குவோர் ஸ்ரீ மகாகவி காளிதாசர், ஸ்ரீ பாஸ்கரராயர், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதர் ஆகியோர். உஜ்ஜயினியில் இந்த தேவியை வணங்கியே, மூடனாயிருந்த காளிதாசன் மகாகவியானான். காளிதாசனின் சியாமளா தண்டகம் மேற்கண்ட வடிவுடைய தேவியையே போற்றுகிறது. பேரருள் தரும் தேவி துதியாக சியாமளா தண்டகம் விளங்குகிறது.

இவளை உபாசித்தால் வித்தை, தனம் ஆகிய இரண்டையும் அள்ளித்தருவாள் என்பது காளிதாஸரின் வாக்கு.

சங்கீத மும்மூர்த்திகளில் ச்யாமா சாஸ்திரிகள் மற்றும் முத்துஸ்வாமி திக்ஷிதரவர்கள் ஆகிய இருவரும் இவளை கானமூர்த்தி / சங்கீத ரஸிகே என்றெல்லாம் கூறிப்பாடியிருக்கிறார்கள். இவற்றில் ச்யாமா சாஸ்திரிகள் நவரத்ன மாலா என்று 9 பாடல்களை இந்த அன்னை மீது பாடி அதற்கு அங்கீகாரமாக யாளிமுக தம்புரா பரிசாக பெற்றதாக கூறுவர்.

பண்டாசுர வதத்தின் போது, கேயசக்ர ரதத்தில் இருந்து அம்பிகைக்கு உதவியாக சியாமளா தேவி போர் புரிந்து, பண்டாசுரனின் தம்பியான விஷங்கனை வதம் செய்தாள்.

மேலும், குறுக்கு வழியில் செல்லும் புத்தியையும் விஷங்கன் குறிக்கிறான். சியாமளா தேவி, நேர்வழியில் செல்லும் மனதிற்கும் புத்திக்கும் ஆத்மஞானம் அறியும் மனநிலைக்கும் அதிபதி. ஆகவே, சியாமளா தேவியே 'விஷங்க வதம்' செய்கிறாள்.

"மாதங்கி சாமளையாம்

பண்டை படிவைத்து உலகாள்'

என்று குறிப்பிடுகிறது உலகம்மை கலித்துறை அந்தாதி என்னும் நூல்.

"ஸங்கீத யோகினி, ஸ்யாமா, ஸ்யாமளா, மந்த்ரிணி, மந்த்ரநாயகி, சசிவேஸானி, ப்ரதானேஸி, சுகப்ரியா, வீணாபதி, ஸமுத்ரிணி, நீலப்ரியா, கதம்பேசி, கதம்பவனவாஸினி, ப்ரியசப்ரியா' என்றெல்லாம் லலிதா உபாக் யானம் சியாமளாவைத் துதிக்கிறது.

ருதுவாகாத பெண்கள் இவள் ஆராதனையால் ருதுவாவார்கள். கருத்து வேற்றுமையால் பிரிந்த கணவன், மனைவி மீண்டும் ஒன்று சேர்வர். சோம்பல், பயம், துக்கம் இம்மூன்றும் இவளை ஆராதிப்பவர்களுக்குக் கிடையாது. மாதங்கி உபாசனையைச் செய்தால் வெகு சீக்கிரத்தில் உலகத்திலேயே மிகச் சிறந்தவராக விளங்கலாம். உலகைத் தன் வசம் கொள்ளலாம்.

வடநாட்டில் ஷ்யாமளா வழிபாடு மிகப் பிரபலமானது. சியாமளா நவரத்னமாலை, சியாமளா ஆவரணம், மாதங்கி ஸஹஸ்ரநாமம், சியாமளா தண்டகம், சியாமளா கவசம், மாதங்கி ஹ்ருதயம், ராஜமாதங்கி மந்த்ரம், மாதங்கி ஸ்தோத்திரம், மாதங்கி ஸுமுகி கவசம், ஸ்யாமளா ஸஹஸ்ரநாமம் போன்ற பல துதிகள் இந்த அன்னையின் புகழைப் போற்றுகின்றன.

இந்த தேவியைப் பற்றி சியாமளா சகஸ்ரநாமம், ராஜமாதங்கி சகஸ்ரநாமம் என இரு சகஸ்ரநாமங்கள் உள்ளன. மாதங்கி அவதாரத்தைப்பற்றி, ஸ்வேதாரண்யம் எனப்படும் திருவெண்காடு தலபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராஜமாதங்கியைத் தினமும் வழிபடலாம். அதிலும், அஷ்டமி, பௌர்ணமி, சித்திரை மாதம் வளர்பிறை,மாசி மாதம் வளர்பிறைகளிலும் வழிபட, பூஜை செய்ய இவள் பேரருள் பெறலாம்.நாமும் லோக மாதா ஸ்ரீ ராஜ மாதங்கி என்னும் ராஜ ஷ்யாமளா தேவியை வணங்கி அருள் பெறுவோம்.

- S Raghu Raman, Ph: 9940349593

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# அற்புதமான ஆன்மிக தகவல் தரும்
# உலகின் முதல் இலவச இணைய இதழ்




## அதிகப்படியான வாசகர்களுடன் தொடர்ந்து முன்னிலைக்கு சென்று கொண்டிருக்கும்

நமது aanmeegamalar.com இணையதளத்திலிருந்து

வெளிவரும் **ஆன்மிகமலர் மெயில் புத்தகத்திற்கு**

தொடர்ந்து ஆதரவு தரும் வாசகர்களுக்கு

# நன்றி... நன்றி... நன்றி....



சத்தான உணவும்
சுகாதாரமான வாழ்க்கையும்
அரசின் கட்டுப்பாடான
வழிமுறைகளை
பின்பற்றி
கொரானாவிடமிருந்து
மீள்வோம்